விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii


SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812



பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஆனி 13 சனிக்கிழமை (27.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190


# தமிழர்களுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா தொடர்ந்து வலியுறுத்தும்

## றொபேட் ஓ பிளேக் உறுதி



(வாஷிங்டன்)

இலங்கையில் சுமுக நிலையைக் கொண்டு வருவதற்கு இன்னும் அனேகம் செய்ய வேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுடன் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள அமெரிக்கா தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வரும் எனவும் ஒபாமா நிர்வாகத்தின் தெற்காசியாவுக்கான பிரதிநிதி றொபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சாத்தியமில்லை - அமைச்சர் முரளி

நாடு கடந்த நிலையில் தமிழீழ அரசாங்கத்தை அமைப்பது முடியாத காரியம் என அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு- திருகோணமலை வீதியில், நேற்று இடம்பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சின் மாவட்ட அலுவலகமும், பயிற்சி நிலையமும் திறப்பு விழாவில் பங்கேற்று உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாடு கடந்த அரசாங்கத்தை அமைப்பதற்கு வேறு ஒரு நாட்டின் அங்கீகாரம் அவசியமானதாகும். இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்படுவதற்கு முன்னர் எந்த ஒரு நாடும் அவர்களுக்கு அங்கீகாரம் வழங்கவில்லை.

தற்போது அவர்கள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அங்கீகாரத்தை எந்த நாடும் வழங்கப் போவதில்லை என வி. முரளிதரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## கோரமின்மையால் நேற்று நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது கோரமின்மை காரணமாக நாடாளுமன்ற நடவடிக்கைகள் எதிர்வரும் 7ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்கான குறைமதிப்பீட்டு விவாதம் சபையில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளை சபையில் போதிய கோரம் இல்லை என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களை சபைக்கு அழைக்கும் மணி ஒலிக்கப்பட்டது. 2.05 மணிமுதல் 2.10 மணிவரை மணி ஒலித்த (12ஆம் பக்கம் பார்க்க)

## நமக்காக நாம் நிதியத்தை ஆரம்பிக்க பாதுகாப்புச் செயலர் அமெ. பயணம்

(கொழும்பு)

பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ இன்று அமெரிக்காவுக்கான விஜயமொன்றினை மேற்கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது கலிபோனியா மற்றும் நெவாடா ஆகிய மாநிலங்களிலுள்ள மக்களுடன் கலந்துரையாடவுள்ளதாக ஏசியன் ரிபியூன் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதிகளை முறியடித்த இலங்கை படையினருக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நமக்காக நாம் என்ற வீட்டுத் திட்டத்திற்கான நிதியம் (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை நாளை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்குமான பயணிகள் கப்பல் சேவை நாளை ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெறும் என அரசாங்க அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கப்பல் பிரயாணத்திற்கான பதிவுகளை மேற்கொண்டு 27,29ஆம் திகதிகளுக்கான அனுமதிச் சீட்டினை பெற்றுக்கொண்டவர்களும் அவசர தேவையின் நிமித்தம் செல்ல இருப்பவர்களும் நாளை (12ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது

### வெளியுறவுச் செயலாளர் தெரிவிப்பு



(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது அரசியல் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வெளியுறவு செயலாளர் கலாநிதி பாலித்த கோஹன்ன தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த நிலையில் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களை ஆறுமாத காலத்தில் மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் பாலித கோஹன்ன குறிப்பிட்டார்.

யுத்தத்தில் இலங்கை (12ஆம் பக்கம் பார்க்க)

## கட்டைக்காடு பகுதியில் செய்ம்மதி தொலைபேசிகள் மீட்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு முள்ளியவளை கட்டைக்காடு பகுதியில், இரகசிய தகவலொன்றையடுத்து, ஒன்றரை கோடி ரூபாய் பெறுமதியான ஜி.பி.எஸ். மற்றும் செய்ம்மதி தொலைபேசிகள், அவற்றுக்கான சிம் கார்ட்டுகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பனைமரம் ஒன்றின் மீது இவைகள் இரகசியமாக ஒளித்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிஸாருக்கு (12ஆம் பக்கம் பார்க்க)

## கப்டன் அலி கப்பலுக்கு இலங்கை வர அனுமதியில்லை

(கொழும்பு)

கப்டன் அலி கப்பலை மீண்டும் இலங்கை கடற்பரப்புக்குள் அனுமதிக்கும் உத்தேசம் இல்லை எனவும் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமாகவே நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்படும் எனவும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கப்டன் அலி கப்பலில் உள்ள நிவாரண பொருட்கள் இந்தியாவில் தரையிறக்கப்பட்டு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கைக்குக் (12ஆம் பக்கம் பார்க்க)

## அதிகளவு இராணுவ நடமாட்டமே இயல்புநிலை தோன்றாமைக்கு காரணம்!

### இலங்கைக் குழுவிடம் இந்தியா எடுத்துரைப்பு

(புதுடில்லி)

தமிழர் பகுதிகளில் இயல்புநிலை திரும்பாமல் இருப்பதற்குத் முக்கிய காரணம் அப்பகுதியில் இராணுவத்தினரின் அளவுக்கு அதிகமான நடமாட்டம்தான் என்று சுட்டிக்காட்டிய இந்தியத் தரப்பு, இராணுவத்தை பாசறைக்குத் திரும்பச் செல்ல உத்தரவிட வேண்டும் என்று இலங்கைக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழகச் செய்திகள் தெரிவித்ததாவது. இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான பசில் ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரும் செயலாளர் லலித் வீரசிங்கவும், இந்தியப் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் (12ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலை செய்யுமாறு கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 120 தமிழ் அரசியல் கைதிகள் தங்களை விடுதலை செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களில் பலர் கடந்த செவ்வாய்க்கிழமையன்று கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களில் பலர் எவ்விதமான (12ஆம் பக்கம் பார்க்க)

# எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு மக்களுக்கு கிடைக்க வேண்டும்

## அமைச்சர் டக்ளஸிடம் யாழ்.ஆயர் வேண்டுகோள்



(யாழ்ப்பாணம்)

தேசிய உணர்வைக் கட்டியெழுப்பும் தேவை மேலோங்க வேண்டும் என்றும் இதனூடாக எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய கௌரவமான அரசியல் தீர்வு எமது மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்றும் இன்றைய நிலையில் இணக்க அரசியல் இன்றி தனித்து எதையுமே செய்ய முடியாதென்றும் யாழ். மாவட்ட ஆயர் வண.தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, யாழ் ஆண்டகையை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இச்சந்திப்பு தொடர்பாக அமைச்சின் அலுவலகம் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளதாவது,

மேற்படி சந்திப்பின் போது தற்கால அரசியல் நிலைமைகள், தமிழ் பேசும் மக்களது எதிர்கால எதிர்பார்புகள் மற்றும் அரசியல் அபிலாசைகள், அவற்றை தீர்ப்பதற்கான நடைமுறை சாத்தியமான வழிமுறைகள், அரசியல் தீர்வு முயற்சிகள் மற்றும் தமிழ் பேசும் மக்கள் தொடர்பிலான அரசாங்கத்தின் நிலைப்பாடு போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் யாழ் ஆயருக்கு அமைச்சர் விரிவாக எடுத்து விளக்கியதுடன் ,

எதிர்வரும் யாழ் மாநகரசபைக் கான தேர்தலில் இணக்க அரசியலை முதன்மைப்படுத்தி எமது மக்களின் நன்மை கருதி ஈ.பி.டி.பி. வெற்றிலை சின்னத்தில் போட்டியிட முன்வந்தமை தொடர்பில் எடுத்துக் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை மிகுந்த சிரத்தையுடன் செவிமடுத்த யாழ் ஆண்டகை தோமஸ் சௌந்தரநாயகம் அரசியல் பகிர்வை முதன்மைப் படுத்திய தீர்வு திட்டத்தை எந்த இடத்தில் ஆரம்பிப்பது நல்லதோ, அதே இடத்தில் இருந்து ஆரம்பிக்கும் படி அமைச்சருக்கு யாழ் ஆண்டகை எடுத்துக் கூறினார். (ஏ)

## மின்சாரசபை ஊழியர் மின் தாக்கி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மின்மாற்றியில் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கி மின்சார சபை ஊழியர் ஒருவர் எரிகாயங்க ளுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் நீர்வேலி மத்தி நீர்வேலியைச் சேர்ந்த வி.நாகேஸ்வரன் (வயது-42) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

பிரஸ்தாப நபர் நேற்று ஊரெழுச் சந்தியில் மின்மாற்றியில் திருத்த வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை மின்சாரம் தாக்கி றிப் வெடித்ததில் எரிகாயங்களுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-7)

## மாணிக்கவாசகர் குருபூசை

(தொல்புரம்)

தொல்புரம் வழக்கம்பரை சிவபூமி இல்ல முதியோர் இல்லத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இல்லத் தலைவர் ஆறு. திருமுகன் தலைமையில் மாணிக்கவாசகர் குருபூசை இடம்பெறவுள்ளது.

இதில் மூளாய் சைவப்பிரகாச வித்தியா சாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ச-3, 27)

## அவதானமாக இருங்கள் ! ! பன்றிக் காய்ச்சல் பரவுகிறது

**யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் அனுப்பி வைக்கப் பட்ட செய்திக் குறிப்பு அப்படியே இங்கு பிரசுரமாகிறது**

பன்றிக் காய்ச்சல் நோய் ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படுகின்றது. தற்போது இந்த நோய் பல நாடுகளில் பரவி வருகின்றது. கடந்த 2 வாரங்களாக இந்த நோய் இலங்கையின் தென் பகுதியில் 5 பேருக்கு பரவியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது சில சமயம் மரணத்தை ஏற்படுத்தக் கூடிய கடுமையான நோயை ஏற்படுத்தவல்லது.

இதனால் நாமும் இது பற்றி கவனமாக இருக்க வேண்டும். இந்த நோய் உள்ள ஒருவர் இருமும் போதும் தும்மும் போதும் வெளிவரும் துணிக்கை காற்றில் கலந்து மற்றவர்களுக்கு பரவுகின்றது.

உங்களுக்கு காய்ச்சல், இருமல், தலையிடி, கை-கால் நோ போன்ற குணங்குறிகள் இருப்பதுடன் கடந்த 2 வாரங்களுக்குள் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பின் நீங்கள் இதுபற்றி டாக்டரிடம் அறியத் தர வேண்டும். இவ்வாறு அறியத் தருவதன் மூலம் நீங்கள் உங்களையும் உங்கள் உறவினர்களையும் மற்றையோரையும் இந்த நோயில் இருந்து பாதுகாக்க முடியும்.

மேற்படி நோயை ஆரம்பத்தில் கண்டறியும் பட்சத்தில் அதற்கான மருந்துகளை உட்கொள்வதன் மூலம் நோயை விரைவில் குணப்படுத்த முடியும். ஆகவே இது பற்றி உங்களுக்கு சந்தேகம் இருப்பின் உடனடியாக வைத்தியருக்கு அறியத் தருவதன் மூலம் உங்களையும் மற்றவர்களையும் இந்த நோயில் இருந்து பாதுகாப்பதற்கு உதவும்.

எனவே மேற்படி குணங்குறியுடையவர்கள் வெளிநோயாளர் பிரிவில் விசேடமாக ஒதுக்கப்பட்ட அறையில் வைத்திய ஆலோசனை பெறவும்.

## மின்சார ஒழுக்கினால் கடை எரிந்து நாசம்

யாழ். நகர மத்தியிலுள்ளகுளிர்பான சாலை ஒன்றில் நேற்று மாலை 6.30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக இத் தீ விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. நகர மத்தியிலே சிறிராம் குளிர்பானசாலையிலேயே இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இத் தீ விபத்தினால் சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் சேதமடைந்ததாக கடை உரிமையாளர் தெரிவித்தார்.

கடை தீப்பற்றி எரிந்த போது தீயணைப்புப் படையினரும், இராணுவத்தினரும் இணைந்து தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர் . (எ-5)

## யாழ். பத்திரிகைகள் எரிக்கப்பட்டமைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழில் இருந்து வெளிவரும் வலம்புரி, உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகள் எரிக்கப்பட்ட சம்பவத்தை ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா அணி வன்மையாக கண்டித்துள்ளது. இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு,

இத்தகைய சம்பவங்கள் வன்முறைக் கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வரும் நம்பிக்கைகளை சிதறடிக்கச் செய்யும். கருத்துக்களில் எப்போதும் ஜனநாயகம் நிலவ வேண்டும். பன்முகத்தன்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். பொதுவாக உருவாகிவரும் ஜனநாயக சூழல் பாதுகாக்கப்பட வேண்டும்.

வேறுபட்ட சமூக சாதகமான அபிப்பிராயங்களுக்கு இடமளிக்கப்பட வேண்டும். நூறு கருத்துக்கள் மலர்வதும் முட்டி மோதுவதுமே சமூகத்தில் ஆரோக்கியத்துக்கு வழி வகுக்கும். கருத்து சுதந்திரத்திற்கு அடிநாதமாக இருப்பது பத்திரிகைச் சுதந்திரம். அது பாதுகாக்கப்பட வேண்டும். இல்லையேல் மக்கள் மௌனமாகி விடுவார்கள். மக்கள் மனங்க ளிலிருந்து பீதி நிலையை நீக்க வேண்டும் அதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

கருத்துக்களிலும் வன்முறை களையப்பட வேண்டும். எமது சமூகத்தில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய கருத்து வன்முறையே பல அழிவுகளுக்கு இட்டுச் சென்ற தென்பதை மனதிலிருத்தி ஆக வேண்டும். கண்ணியமான தொரு கருத்து சுதந்திர பண்பாடு எமது சமூகத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

அதற்கான சூழ்நிலை உருவாகிவரும் வேளையில் நம்பிக்கைகளை தளர்வடையச் செய்யும் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். இயல்பு நிலையை தோற்றுவிக்கவும் ஜனநாயக சூழல் மேம்படவும் பத்திரிகை சுதந்திரத்தை பாதுகாக்கவும் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்று பட்டு குரல் கொடுப்பது அவசியம் என்றுள்ளது. (ஏ)


## மரண அறிவித்தல்

### திருமதி தியாகராசா வள்ளிநாயகிதேவி



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா வள்ளிநாயகிதேவி 24.06.2009 அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ் சென்ற விஜயசிங்கம் சின்னத்தங்கம் தம்பதியினரின் மூத்த மகளும், காலஞ் சென்றவர்களான செல்லையா அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் தியாகராசாவின் அன்பு மனைவியும் யாழினி (யாழ்ப்பாணக் கல்லூரி G.A.Q. 2009 மாணவி), கபில்ராஜ் (மாணவன் கொழும்பு), ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயகுலசிங்கம், சிவசுப்பிரமணியம் (ஜேர்மனி), சிவகுமார் (தெல்லிப்பளை துர்க்கையம்மன் தேவஸ்தானம்), காலஞ்சென்ற சிவபாஸ்கரன் , சிவலோகநாயகி தேவி (கனடா), சிவசண்முகநாதன் ஆகியோரின் சகோதரியும், ரஞ்சிதமலர், அமிர்தாம்பிகை (ஜேர்மனி) ஜெயராணி (தாதியர் சகோதரி, யாழ். போதனா வைத்தியசாலை), ஜெகநாதன் (கனடா), லிங்கேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.06.2009 அன்று வியாழக்கிழமை பி.ப.3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி மேற்கு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்மளை , அளவெட்டி மேற்கு, அளவெட்டி.

தகவல் குடும்பத்தினர்.

(2884)


## அம்பன் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

யாழ்.மாவட்ட சுகாதார திணைக்களத்தின் அம்பன் பிரதேச வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. இது அம்பன் வைத்தியசாலை தற்போது தற்காலிகமாக இயங்கிவரும் குடத்தனை ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

இப்பிரதேச மக்கள் அவசர மருத்துவ நிலைகளின்போது இவ் அம்புலன்ஸ் வண்டியின் சேவையை நாடலாம். அவசர மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளர்கள் இங்கிருந்து 24மணி நேரமும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே இச்சேவை தேவைப்படும் இப்பிரதேச மக்கள் எமது குடத்தனை ஆரம்ப சுகாதார நிலையத்துடன் தொடர்பு கொள்ளலாம் என யாழ்.சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்தியக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)


**வீணைகள் விற்பனைக்குண்டு**

**நல்ல நிலையிலுள்ள வீணைகள் விற்பனைக்குண்டு.**

**தொடர்பு - 0775002162**

(2879)

**விற்பனைக்கு**

பொற்பதி வீதி, கந்தர்மடம், மணியகாரன்லேன், ஆனைக்கோட்டை, பிரம்படிலேன் ஆகிய இடங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்கு உண்டு நல்லூர்,யாழ்ப்பாணம் பகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தரகர் தேவையில்லை.

**சேவை முகவர்**

தொடர்பு : சுந்தரம்

தொடர்புநேரம் : பகல் 1 மணி- 2 மணி

(2883) T.P:-021 2229177


## பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் க.பொ.த.உயர்தரம் பௌதிகவியல் புதிய பாடத்திற்குரிய செயலமர்வு இன்று சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வளவாளராக பேரா சிரியர் க.கந்தசாமி கருத்துரை வழங்கவுள்ளார். க.பொ.த. உயர்தரத்தில் பௌதிகவியல் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டைமா னாறு வெளிக்கள நிலையம் கேட்டுக் கொள்கின்றது. (6-4)

# இன்று ஒரு தகவல்

## வாழ்வது எதற்காக?

அலுவலகத்தில் வேலை பார்க்கும் ஒருவர் இருந்தார். அவர் வேலை முடிந்து வீட்டுக்குப் போகும் போது ஒரு பெரிய பையைத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு போவார்.

எல்லாம் அலுவலக பைல்கள்... பதிவேடுகள். வீட்டுக்குப் போயும் அலுவலக வேலைகளைப் பார்ப்பதற்காகத் தான் அவர் அப்படிச் சுமந்து கொண்டு போகிறார்.

'கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பவர்' என்று அவருக்குப் பெயர். பலர் இப்படி உண்டு.

அலுவலகத்தை வீட்டுக்குச் சுமந்துகொண்டு செல்பவர்கள். இப்படிப்பட்டவர்கள் வாழ்க்கை ஒரு திருவிழா என்பது தெரியாமலே வாழ்ந்து முடித்து விடுகிறார்கள்.

வாழ்க்கை என்பது கடமைகளை நிறைவேற்றுவதற்காக அமைந்த ஒன்றா அல்லது அது ஒரு கொண்டாட்டமா என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் ஓஷோ.

வாழ்க்கை கொண்டாடுவதற்காக அமைந்த ஒன்று என்று நினைப்பவர்கள் வேலை செய்வதையே விட்டுவிடுவார்கள் என்று அர்த்தமில்லை.

நிச்சயமாக அவர்கள் வேலையைச் செய்வார்கள். ஆனால் அதுவும் அவர்களுடைய கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்து விடும். விழாவின் அம்சம் அதில் கலந்திருக்கும்.

வேலையிலேயே மூழ்கிவிடுபவர்களுக்கு வாழ்க்கையே வேல்லயாகிவிடும்... பலர் அப்படித்தான்.

வாழ்வையே ஒரு தொழிற்சாலையாக மாற்றிக் கொண்டு கவலைப்படுகிறார்கள். வாழ்வதற்காகத்தான் வேலை செய்கிறோம். ஆனால் வேலையே வாழ்க்கையாகி விடுகிறது.

ஆடிப்பாடி மகிழநேரமில்லாமல்அந்திமகாலம் வந்து சேர்ந்து விடுகிறது.

எல்லோரும் கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். மனிதனைத் தவிர... மற்ற எல்லாவற்றுக்கும் இந்த வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டுத்தான் – திருவிழா தான்.

இவன் தான் வேலை செய்கிறான். கடினமாக உழைக்கிறான். ஏராளமாக கண்ணீர் சிந்துகிறான்.

நமக்கு நாமே குழப்பத்தையும்–சிக்கலையும் உண்டாக்கிக் கொள்கிறோம். அதில் சிக்கிக் கொள்கிறோம். பின்னர் காலம் முழுவதும் ஓய்வு கிடைக்காதா, நிம்மதியாக வாழ்க்கையை அனுபவிக்க முடியாதா என்று ஓடிக் கொண்டே இருக்கிறோம்.

அந்த நாள் வருவதேயில்லை.

தொழில் போதையில் மூழ்கிக்கிடப்பவர்களுக்கு ஓய்வு, மகிழ்ச்சி, வாழ்க்கையின் இன்பம் எதுவுமே தெரிவதில்லை. பழங்குடி மக்களைப் பாருங்கள்.

நாள் முழுவதும் அவர்கள் உழைப்பது இரவில் ஆனந்தமாக ஆடிப்பாடி மகிழத்தான்.

ஆனால் நாகரிக மனிதன் என்ன செய்கிறான்?

பகலில் மட்டுமல்ல ; இரவிலும் உழைக்கிறான்.

இரவு பகலாக உழைக்கிறேன் என்று பெருமையாகவும் சொல்கிறான். இன்றைய உலகில் ஆனந்தம் இருக்க வேண்டிய இடத்திலெல்லாம் பொழுதுபோக்கு ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது.

ஆனந்தம் என்பது வேறு. பொழுதுபோக்கு என்பது வேறு. கொண்டாட்டத்தில் நீங்களும் பங்கு பற்றலாம். கலந்து கொள்ளலாம்.

பொழுதுபோக்கில் நீங்கள் வெறும் பார்வையாளர் மட்டும்தான். ஆட்டத்தைப் பார்ப்பது ஒரு பொழுது போக்கு. நீங்களே ஆடுவது ஆனந்தம்... கொண்டாட்டம். வாழ்வையே வேலையாக்கி விடுபவர்கள் இந்த உலகத்தையே ஒரு பைத்தியக்கார விடுதியாக்கி விடுகிறார்கள்.

எதையோ நோக்கி எங்கேயோ ஓடும் பைத்தியக்காரர்களாகத்தான் அவர்கள் காட்சியளிக்கிறார்கள். எங்கே ஓடுகிறோம் என்பது யாருக்கும் தெரியாது.

ஒருவர் வாடகைக் காரில் ஏறி உட்கார்ந்து "வேகமாக போ" என்றான். கார் பறந்தது. சிறிது நேரம் கழித்து... காரை ஓட்டியவர் மெதுவாகத் திரும்பி, "எங்கே போக வேண்டும்?" என்று கேட்டார்.

அதற்கு இவர், "எங்கே போகவேண்டும் என்பது முக்கியமில்லை. நான் வேகமாகப் போகவேண்டும் என்பது தான் முக்கியம்" என்றாராம்.

இது போலத்தான் வாழ்க்கையில் எல்லோரும் பறந்து கொண்டிருக்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆசிரிய இடமாற்றத்திற்கான — விண்ணப்பம் கோரல் —

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய இடமாற்றங்கள் - 2010 தொடர்பாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளரின் NP/20/ET/F/10/1இலக்க 2009.06.11 ஆம் திகதிய கடிதத்துக்கமைய ஆசிரிய இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இவ் இடமாற்றங்கள் வலயத்துக்குள்ளான இடமாற்றம், வலயங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் (மாவட்டத்திற்குள்), மாவட்டங்களுக்கிடையிலான இடமாற்றங்கள், மாகாணங்களுக்கிடையிலான இடமாற்றங்கள் எனும் நிலைகளில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இடமாற்றம் பெற / இடமாற்றப் படத் தகுதியானவர்கள் வருமாறு,

⌘ வலயத்தில் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் ஆறுவருடங்களுக்கு மேல் கடமை புரிந்திருந்தால் அதே வலயத்தில் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதற்கும், வேறு பாடசாலையில் ஆறு வருடத்திற்கு மேல் கடமையாற்றிய ஒருவர் குறித்த பாடசாலைக்கு இடமாற்றம் கோரும் பட்சத்தில் இடமாற்றம் செய்யப்படுவதற்கும் உரித்துடையவர்கள்.

⌘ கஷ்டப் பிரதேசங்களில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள்.

⌘ வசதியான பிரதேசத்தில் ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்கள்.

⌘ விசேட வைத்திய காரணங்களுக்காக இடமாற்றம் கோருவோர்

⌘ வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையில் கடமையாற்றும் மனைவி / கணவன்

⌘ கணவன்/மனைவி ஒன்றாக இணைந்து வாழ வேண்டிய அத்தியாவசியத் தேவை ஏற்படின் அத்தகையோரது இடமாற்ற கோரிக்கை தொடர்பில் விண்ணப்பதாரி குறித்த வலயத்தில் குறைந்தது நான்கு வருட சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

⌘ 53வயதைபூர்த்திசெய்தஆசிரியர்கள் தங்கள் சுயவிருப்பத்தின் பேரில் இடமாற்றம் கோரி விண்ணப்பிக்காதவிடத்து அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படமாட்டாது.

⌘கர்ப்பிணித்தாயைப் பொறுத்தவரையில் அவரின் விருப்பமின்றி இடமாற்றம் வழங்கப்படமாட்டாது. ஆயினும் கர்ப்பிணித்தாயினால் இடமாற்றம் கோரப்படுமிடத்து அவரது வைத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

⌘தற்காலிக இணைப்பிலுள்ள வெளிமாவட்ட ஆசிரியர்கள் மேற்படி இடமாற்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்திருப்பின் தங்களது இடமாற்ற விண்ணப்பங்களை தற்காலிக இணைப்பிலுள்ள பாடசாலை அதிபரின் குறிப்புடன் சமர்ப்பிக்கப்படுமிடத்து உரிய நடவடிக்கைக்காக மாகாணம் கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும்.

⌘தற்காலிக இணைப்பிலுள்ள வெளிமாவட்ட ஆசிரியர்கள் தங்களது இடமாற்ற விண்ணப்பத்துடன் முதல் நியமனக் கடிதப் பிரதியும், இடமாற்றத்தினை சான்றுபடுத்தக் கூடிய ஆவணங்களும் இணைக்கப்படுதல் வேண்டும்.

சகல இடமாற்ற விண்ணப்பங்களும் அதிபர் ஊடாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் குறித்த திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்றும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (6)

# வடமராட்சி வலயமட்ட கோலப் போட்டி முடிபுகள்

(அல்வாய்)

வடமராட்சி வலயமட்டக் கோலப் போட்டிகளின் முடிபுகள் வலயக்கல்விப்பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு,

**தரம் - 1**

சு. வனஜா (தும்பசிட்டி மெ.மி.த. க.பா.), சு. மிதுன்ராஜ் (பரு. சித்தி விநாயகர் வித்தி), சோ. தர்ஷாயினி (தேவரையாளி இந்துக் கல்லூரி), வே. அருட்குமரன் (வல்வை மகளிர் கல்லூரி), யோ. அனோஜா (அம்பன் அ.மி.த.க.பா).

**தரம் - 2**

கோ. கோகுலரூபன் (புற்றளை ம. வித்தி), க. வினோஜன் (நெல்லியடி மெ.மி.த.க.பா), அ. உமாபாரதி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சி. துவாரகா (தும்பசிட்டி மெ.மி.த.க. பா.) சே. தக்சனா (வட இந்து மகளிர் கல்லூரி).

**தரம் - 3**

இ. மிதுனன் (கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க. பா), சி. உசாந்தன் (உடுப்பிட்டி அ.மி.க.பா), அ. ஸ்ரெலன்குமார் (கலட்டி றோ.க.த.க.பா), ர. சுபீட்சணன் நெல்லியடி மெ.மி.த.க.பா), யோ. கோஜிதன் (தும்பசிட்டி மெ.மி.த. க.பா)

**தரம் - 4**

கு. மாலன்பன் (துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பா), ர. அம்சன் (கரணவாய் மணியகாரன் தோட்டம் அ.த.க.பா), யோ. சாம்பவி (நெல்லியடி மெ.மி.த.க.பா), சி. ஜினுசியா (கரணவாய் தாமோதர வித்தி), த. சாருகன் (வதிரி வடக்கு மெ.மி.த. க.பா).

**தரம் - 5**

யோ. நிரோஜன் (அல்வாய் சின்னத்தம்பி வித்தி), தே. நிவேதினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கி. ஜதுகோபி (தும்பளை சிவப்பிரகாச வித்தி), கே. டிலக்சியா (துன்னாலை மேற்கு மெ.மி.த.க.பா), சி. சாஜிகன் (அம்பன் அ.மி.த.க.பா)

(6-19)

# இராசி பலன்

27.06.2009
(ஆனி 13, சனிக்கிழமை)
பஞ்சமி பிற்பகல் 2.34 மணிவரை
மகம் மாலை 5.24 மணிவரை
இராகுகாலம் 8.55-10.25 மணிவரை
சுபநேரம் 2.55-4.25 மணிவரை
ஸ்கந்த பஞ்சமி, மாணிக்க வாசகர் குருபூசை, அமிர்த சித்தம்.

| | |
|---|---|
| மேடம் | ஆரோக்கியக் குறைவு, தொழில் நன்மை, சகோதரர் உதவி, குடும்ப கவலை. |
| இடபம் | தாய்வழி உறவு, வாகன சுகம், மனச் சஞ்சலம், கடின முயற்சி. |
| மிதுனம் | பிரயாண நன்மை, சகோதரர் வழி நன்மை, சிந்தனை மிகுதி, முயற்சி கைகூடும். |
| கடகம் | விவாதம், வேலைச்சுமை, அமைதிக்குறைவு, தனவிரயம். |
| சிங்கம் | தேகநலன், பெரியோர் உதவி, மேன்மை, முயற்சி கைகூடும். |
| கன்னி | பிரயாண அலைச்சல்,சுபசெலவு, கௌரவக் குறைவு, புதிய திருப்பம். |
| துலாம் | காரிய நன்மை, கீர்த்தி, பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | தூர தேசச் செய்தி, அதிக பிரயாசை, அதிகாரம், நண்பர்கள் உதவி. |
| தனுசு | மனச் சோர்வு, நிர்ப்பந்த நிலை, பிரயாணம், முயற்சி தாமதம். |
| மகரம் | பிரயாண பயம்,காரிய தடங்கல், பணக்குறைவு, போசன சுகம். |
| கும்பம் | சௌக்கிய விருத்தி, காரிய அனுகூலம், பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| மீனம் | மனமகிழ்ச்சி, உடல்நலம், தொழில் மேன்மை, உறவினர் சந்திப்பு. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் 1 Kg | திருநெல்வேலி ரூபா | யாழ்ப்பாணம் ரூபா | சாவகச்சேரி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 40-80 | 100 | 40 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 140 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 60 |
| தக்காளி | -- | 400 | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 |
| கோவா | -- | -- | -- |
| கரட் | 80 | 120 | 120 |
| பூசணி | 20 | 40 | 30 |
| புடோல் | 60 | 70 | 30 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 50-60 | 80-90 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 |
| பாகற்காய் | 80 | 70 | 60 |
| வெண்டிக்காய் | 50-60 | 80-90 | 60 |
| கரணைக் கிழங்கு | 70 | 80 | -- |
| பயிற்றங்காய் | 60 | 90 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 |
| பீற்றூட் | -- | -- | 65 |
| கறிமிளகாய் | 50 | 60 | 60 |
| முருங்கைக்காய் | -- | -- | 500 |
| கீரை – 1 பிடி | 10 | 15 | 10 |
| தேசிக்காய் | 120 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 25 |

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில்-நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் ஜுலை மாதம் 5 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை சப்பறமும், 6ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு வசந்தமண்டப பூசையைத் தொடர்ந்து இரதோற்சவமும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும், மாலை 3 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (6-4)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய மற்றும் தோற்றாத தொண்டர் ஆசிரியர்களின் பெயர் பட்டியல் உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதால் சகல தொண்டர் ஆசிரியர்களையும் சமூகமளித்து தமது பெயர்களை உறுதிப்படுத்துமாறு தொண்டர் ஆசிரியர் சங்க செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (6-4)

## யாழ்.கல்விக் கோட்ட தமிழ் மொழி தினப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்விக் கோட்ட தமிழ் மொழித்தின போட்டிகளில் வாசிப்பு ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு,பாவோதல், இசையும் அசைவும் , இசைதனி, விவாதம் இசை குழு I,II நடனம் தனி, நடனம் குழு I , நாட்டார் பாடல், வில்லுப்பாட்டு,தமிழறிவு வினா விடை ஆகியவற்றுக்கு விண்ணப்பித்த அனைத்துப் பிரிவுக்குமுரிய போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலையில் நடை பெறவுள்ளது.

உரியநேரத்தில் அனைத்துப் போட்டியாளர்களையும் சமூகம்தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அறிவித்துள்ளார். (6)

## திருமறைக்கலாமன்றம் நடத்தும் கலைநிலா அரங்கு இன்று

(கொழும்புத்துறை)

மாதாந்த அரங்க நிகழ்வான கலை நிலா அரங்கு இன்று மாலை 4 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள் ளது.

இந்நிகழ்வில் கலைத்தூது அழகியற் கல்லூரி மாணவர்களின் நடனங்கள், பாட்டு, ஓகன் இசை போன்றவற்றுடன் புனித பத்திரிசியார் கல்லூரி ஆரம்ப பிரிவு மாணவர்களின் நடனம், திருமறைக்கலாமன்ற இளையோர் அவையின் நாடகம் என்பனவும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (6-51)

# சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாவது குருபூசை வைபவம்

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் முதலாவது குருபூசை வைபவம் எதிர்வரும் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் காலை 9 மணிக்கு ஆலயத்தில் விசேட பூசை, அன்னையின் நினைவாலயத்தில் வழிபாடுகளைத் தொடர்ந்து அன்னையின் உருவச் சிலை வழிபாடு, திருமுறை மடத்தில் விசேடபூசை, வழிபாடு திருமுறைப் பாராயணம் என்பனவும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரார்த்தனையுரையை கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய முதல்வர் ஸ்ரீ . கு.நகுலேஸ்வரக்குருக்கள், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதம குரு வா. அகிலேஸ்வரக் குருக்கள், நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோர் வழங்குவதுடன் நினைவுரையை யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் வழங்குவார்.

அத்துடன் முற்பகல் 10.50 மணிக்கு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. சிறப்புரையை அகில இலங்கை இந்துமாமன்ற முதல்வர் கயிலாசபிள்ளை, வெளியீட்டுரையை அகில இலங்கை இந்து மாமன்ற செயலாளர் கந்தையா நீலகண்டன் ஆகியோர் வழங்குவதுடன் , திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய முதலாம் திருமுறை வெளியீடும் இடம்பெறவுள்ளது. (6-4)

# அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தால் நடத்தப்பட்ட கட்டுரை போட்டி முடிபுகள்

அகில இலங்கை கலை இலக்கிய சங்கத்தால் நாடகக் கலைஞர் கந்தையா வடிவேலு ஞாபகார்த்தமாக நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி முடிபுகள் வெளியாகியுள்ளன. இதில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:

முதலாம் இடம் போ.சித்திரா (சுதுமலை தெற்கு), இரண்டாமிடம் ச.உசாந்தினி (கோப்பாய் மத்தி), மூன்றாமிடம் கு.சுபாசினி (கண்டி)

வெற்றிச் சான்றிதழ் பெறும் போட்டியாளர்கள், இ.விஜயதர்சினி (கரணவாய் கிழக்கு), நா.சங்கீதன் (கொழும்பு 6), நெயினா முகமட் பார்த்திமா நிவ்னா (கம்பஹா), செ.நீரஜா (துன்னாலை), ச.நபேந்திரன் (கல்முனை), எஸ்.சிவதாசன் (ஜே.பி) (அரியாலை), செ.சேயோன் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.தனுசியா(கரவெட்டி கிழக்கு), ஆ.கேமதர்சினி (மாத்தளை), ம.கிருசாந்தி (கொடிகாமம்),

முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு முறையே 5000,3000,2000 பணப்பரிசும் சான்றிதழும் வழங்குவதோடு வெற்றியீட்டிய ஏனைய 10 போட்டியாளர்களுக்கும் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள கலை இலக்கிய விழாவில் வைத்து வெற்றிச் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர் என சங்கத் தலைவர் சொல்வேந்தர் பொன்.சுகந்தன் தெரிவித்துள்ளார். (6)

# விசேட தேவையுடையவர்களுக்கான உதவியும் கருத்தமர்வும்

(யாழ்ப்பாணம்)

நவாலி கேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிறுவன அனுசரணையுடன் வலி. தென்மேற்கு சமுர்த்தி அலுவலர் அமரர். செ.சதீஸ் ஞாபகார்த்தமாக விசேட தேவை உடையவர்களுக்கான உதவியும் கருத்தமர்வும் எதிர்வரும்செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மரியதாஸன் ஜெகூ கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம்,சண்டிலிப்பாய் சிரேஷ்ட சமூகசேவை அதிகாரி வி.அருந்தவராசா , நவாலி மகாவித்தியாலய முதல்வர் இரா.வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் வரவேற்புரையை சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் செ.சுரேஸ் வழங்கவுள்ளார். மேலும் இன்றைய காலகட்டத்தில் விசேட தேவை உடையவர்களுக்கு அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கு என்னும் விடயம் பற்றி பசுமைப்புரட்சியாளர் மானியூர் வை.செகராஜசிங்கம் விசேட உரையாற்றவுள்ளார். (6-4)




## வடமராட்சி வலய சிறுவர் அரங்கு நிகழ்வு

(அல்வாய்)

வடமராட்சி வலய மட்ட சிறுவர் அரங்கு நிகழ்வுகளில் முதலாம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல் லூரியும் இரண்டாம் இடத்தை நெல் லியடி மெ.மி.த.க. பாடசாலையும் மூன்றாமிடத்தை பருத்தித்துறை சித்தி விநாயர் வித்தியாலயமும் பெற்றுக் கொண்டனர். (6-4-19)




விவசாய சேவைகள் அபிவிருத்தி அமைச்சினால் ஜப்பானிய ஜென் உதவித் திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு இந்த வருடத்திற்கான 20 உழவு இயந்திரங்கள் கையளிக்கும் நிகழ்வு யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விவசாயி ஒருவருக்கு உழவு இயந்திரத்தை கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

# வழுக்கையாற்று புனரமைப்பு தொடர்பான உறுதிப்படுத்தல் கூட்டம்

நியாப் திட்டத்தின் கீழ் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தால் புனரமைக்கப்பட்டு வரும் வழுக்கையாற்றின் 4.70 கிலோ மீற்றரிலிருந்து 12.575 கிலோ மீற்றர் வரையான வாய்க்கால் புனரமைப்பு தொடர்பான உறுதிப்படுத்தல் கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் தெல்லிப்பளை பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் புனரமைப்பு வேலைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட இருப்பதனால் இத் திட்டத்துடன் தொடர்பான பயனாளிகளையும் விவசாய பிரதிநிதிகளையும் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் கேட்டுக்கொண்டுள்ளார். (6)

## 'உலகின் மூன்றாவது கண்' நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

காவலூர் இ.விஜேந்திரனின் ''உலகின் மூன்றாவது கண்'' எனும் நூல் அறிமுகவிழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் பயிற்சி மையத்தில் எழுத்தாளர் எஸ்.ஜோசப் பாலா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல்வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக ஊடக பயிற்சி மையத் துறைத்தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, அறிமுக உரையை வலம்புரி பிரதம ஆசிரியர் என்.விஜயசுந்தரம், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் உதவி விரிவுரையாளர் செல்வி ரி. கிருத்திகா ஆகியோர் வழங்குவதுடன், முதல் பிரதியை அன்னை புத்தகசாலை உரிமையாளர் செ.விஜிதரன் பெற்றுக்கொள்வார். (6-4)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான சமூக நலத்துறை, சமூக சேவைகள் அமைச்சருடனான சந்திப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில் வேலையற்ற பட்டதாரிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (6)

## 5ஆவது பதவியமர்வு நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தில் 5 ஆவது பதவியமர்வு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் உப மாவட்ட ஆளுநர் லயன் பிரியந்த பெர்னாண்டோ பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக லயன் எஸ். சிவராஜேஸ்வரன், லயன் எஸ்.எஸ். தங்கராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக லயன் வி. ஸ்ரீபிரகாஸ், சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் வே.சிவராஜலிங்கம்,கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் வி. நடராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (6-29)

## மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினால் இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் தெற்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து மாணிக்க வாசக சுவாமிகளுக்கு பூசை, திருவாசகப் பாராயணம் ஆகியன இடம்பெறவுள்ளது.

அத்துடன் காலை 9.30 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி தேவஸ்தானத்தில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து மாணிக்க வாசக சுவாமிகளுக்கு பூசை, திருவாசகப் பாராயணம் ஆகியன இடம்பெறும். (6)

# 25 நாடுகளுக்கு விஜயம் செய்ய 10 மில்லியன் ரூபா செலவு

## வெளிவிவகார அமைச்சர் தகவல்



(கொழும்பு)

2008ஆம்ஆண்டு மே மாதம் வரையில் 25 நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம இதற்கு 10 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது வெளிவிவகார அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்கள் தொடர்பில் ஜே.வி.பி. எம்.பியான பேமசிறி மானகேயின் கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே வெளிவிவகார அமைச்சர் ரோஹித்த போகொல்லாகம இதனைத் தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

25 நாடுகளுக்கு விஜயம் செய்தமைக்கு 10 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த விஜயங்களின் மூலமாக நாட்டிற்கு பல்வேறு நன்மைகள் கிடைத்துள்ளன. புலிகளை ஒழிப்பதற்கு சர்வதேச ரீதியில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க முடிந்தது.

சர்வதேச தளத்துடன் தொடர்புகளைக் கொண்டிருந்தமையினால் பல்வேறு அமைப்புக்களில் தலைமை ஏற்க முடிந்தது என்பதுடன் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது.

வெளிவிவகார அமைச்சரின் வெளிநாட்டு விஜயங்களின் மூலமாக பல்வேறு நன்மைகள் கிடைத்துள்ளன. நாட்டிற்கு கிடைத்த நன்மைகளை அடுக்கிக் கொண்டே போகலாம் என்றார்.

குறுக்கிட்ட பேமசிறி மானகே, எதிர்காலங்களிலும் விஜயங்களை மேற்கொள்ள வேண்டும் என்று பிரார்த்தனை செய்வதுடன் நிதி தேவை என்றால் சகல உறுப்பினர்களிடமும் பெற்ற வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்றார்.

இதனால் சபையில் சிரிப்பொலி எழுந்தது. (6)

# 'டெங்கினால் 160 பேர் பலி 12 ஆயிரம் பேர் பாதிப்பு'

(கொழும்பு)

டெங்கு எனும் சொல்லின் சிங்கள அர்த்தம் எலும்பை உடைக்கும் நோயாகும். இதனால் இலங்கையில் இன்று வரையிலும் 160 இற்கு மேற்பட்டோர் பலியானதுடன் 12 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஜே.வி.பி. எம். பியான நவரட்ன பண்டார தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சலினால் கண்டி மாவட்டத்திலேயே கூடுதலானோர் 25 பேர் பலியாகியுள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், டெங்கு ஒழிக்கப்படுகின்றது. உற்பத்தியாகும் இடங்கள் ஒழிக்கப்படுகின்றனவா? என்பதில் சந்தேகம் எழுந்துள்ளது.

உலகத்திற்கே தலைவன் என்பதனால் மட்டுமே டெங்குவை அழிக்க முடியாது. எனினும் அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும்.

தொற்று நோய்களை அழிக்க வேண்டும். ஏனென்றால் பன்றி, எலிக் காய்ச்சல்கள் பரவிக் கொண்டு வருகின்றன.

டெங்கு நுளம்பு குத்தினாலும் தாங்கிக் கொள்ளலாம். அமைச்சர்களின் பதிலை ஏற்றுக்கொள்ளவோ, தாங்கிக் கொள்ளவோ முடியாது.

அமைச்சருக்கு இயலாவிடின் புதிய அமைச்சுப் பதவிகளை வழங்கும் போது எலிக்காய்ச்சல், பன்றிக் காய்ச்சல் மற்றும் டெங்குக் காய்ச்சலுக்கான ஒவ்வொரு அமைச்சுக்களை நியமித்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்குகிறோம் என்றார். (6)

# இந்திய எல்லையில் அத்துமீறி நுழைந்த 25 இலங்கை மீனவர்கள் கைது

(சென்னை)

இந்திய எல்லையில் அத்துமீறி நுழைந்து ஐந்து படகுகளில் மீன் பிடித்த 25 இலங்கை மீனவர்களை இந்திய கடற்படையினர் சுற்றி வளைத்துப் பிடித்தனர். அவர்களின் படகுகளும் அதில் இருந்த மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

மும்பை தாக்குதலைத் தொடர்ந்தும், விடுதலைப் புலிகள் ஊடுருவலை கண்காணிக்கவும் கடலோர காவல் படையினர் தீவிர ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய கடல் பகுதியில் 35 நாட்டிக்கல் மைல் தொலைவில் கிருஷ்ணபட்டினம் பகுதியில் கடலோரக் காவல் படையினர் "ஷரங்" கப்பில் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது இலங்கையைச் சேர்ந்த ஐந்து படகுகள் அப்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தன. கடலோரப் பாதுகாப்புப் படையின் ரோந்து விமானத்தின் உதவியுடன் அந்த ஐந்து படகுகளையும் சுற்றி வளைத்த கடலோரக் காவல் படையினர் 25 இலங்கை மீனவர்களையும் பிடித்தனர். அத்துடன் ஐந்து படகுகளையும், அதில் இருந்த 2ஆயிரத்து 900 கிலோ மீன்களையும் பறிமுதல் செய்தனர். மீனவர்கள் அவர்களின் படகுகள் மற்றும் மீன்களை சாசிமேடு மீன்பிடித்துறைமுக பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைத்தனர். பொலிஸார் வழக்குப் பதிவு செய்து இலங்கை மீனவர்கள் 25 பேரையும் சிறை யில் அடைத்தனர். (6)






சாவகச்சேரி பிரதேசசபையின் வரணி பொதுநூலகத்தில் நடைபெற்ற தேசிய நூலக வார நிறைவு நாள் நிகழ்வில் பிரதேச சபைச் செயலாளர் வே.சிவராஜலிங்கம் தலைமையுரையாற்றுவதனையும், அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட விரிவுரையாளர் சி.உதயகுமார் மற்றும் தர்மலிங்கம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் மற்றும் பொதுமக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி நிருபர்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

# அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

85

ஒபாமா நைரோபிக்கு வந்து இரண்டு நாட்கள் கழிந்துவிட்ட நிலையிலும் அவருடைய பயணப் பெட்டி இன்னும் அவருக்குக் கிடைக்கவில்லை. ஔமாவும் ஒபாமாவும் மீண்டும் விமான நிலையம் சென்று விசாரித்தனர். அங்கே பணிப்பெண்கள் பெட்டிகளைக் கண்டுபிடிக்க எந்த ஆர்வமும் காட்டவில்லை. ஔமா பிரிட்டிஷ் எயர்வேய்ஸ் தலைமையலுவலகத்திற்கு கூட்டிச் சென்றார். அங்கும் ஒரே பதில்தான் கிடைத்தது.

"உங்கள் பெட்டி பற்றிய எந்தப் பதிவுகளும் எங்களிடமில்லை" என்று. களைத்துப் போய் ஒரு சோபாவில் சோர்ந்து இருந்தனர். அப்போது ஔமாவுக்கு நன்கு தெரிந்த ஒரு அலுவலர் ஔமாவிடம் வந்து குசலம் விசாரித்தார். அவர் உண்மையில் ஏதோ ஒரு வழியில் ஔமாவுக்குச் சொந்தமானவராம். அவர் பொறுப்பதிகாரியிடம் நடந்ததைக் கூறினார். பொறுப்பதிகாரி மாதுரி. மற்றவரின் நண்பர். அவர் தொலைபேசியில் விசாரித்ததில் ஒபாமாவின் (லக்கேஜ்) பொதிப் பெட்டி வந்து கிடக்கிறது என்று தெரிய வந்தது.

"ஹலோ! யார் அங்கே? இங்கே ஒபாமா என்பவர் தனது பெட்டியைத் தேடிக் கொண்டிருக்கிறார்.ஆம் ஒபாமாதான். ஓ.கே. உடனே அனுப்பிவிடு" என்று மாதுரி தொலைபேசியில் கட்டளையிட்டு விட்டு ஔமாவின் அலுவலக விலாசத்தைக் கொடுத்தார். பெட்டி அவளுக்கு அடுத்தநாள் வந்துசேரும் என்று சொல்லி அனுப்பினார்.

இருவரும் அலுவலகத்தின் கீழ் மாடிக்கு வந்தனர். அங்கே கென்யாட்டாவின் பெரிய படம் சுவரில் மாட்டியிருந்தது. அவரின் கண்கள் தன்னம்பிக்கையும் தந்திரமும் நிறைந்து பளபளத்தன. அவரின் பலம் வாய்ந்த கையில் கிக்கியூ இனத் தலைவனுக்குரிய



அழகிய ஊன்றுகோல் காணப்பட்டது. ஔமா "இங்கே தான் எல்லாம் ஆரம்ப மாகிறது. தொலைபேசி எடுக்க வேண்டுமானாலும், விசா அல்லது தொழில் எதற்கும் அவருடைய சொந்தமாக அல்லது அவருக்குத் தெரிந்தவராகத் தான் இருக்க வேண்டும்.

இதைத்தான் தன் தந்தை விளங்கிக் கொள்ளவில்லை. ஆகையினால் தான் தன் அழிவை விலையாகக் கொடுத்தார்.

ஔமா கூறிய கதை ஒன்று ஒபாமாவுக்கு ஞாபகம் வந்தது. அது அவர்களின் தந்தை பற்றியது. ஒருநாள் மாலை கிழவர் ஔமாவை அழைத்து அயலில் உள்ள மளிகைக் கடைக்குப் போய் தனக்குச் சில சிகரெட்டுக்கள் வாங்கி வரும்படி கூறினார். ஔமா அவருக்கு தன்னிடம் பணம் இல்லையென்பதை ஞாபகப்படுத்தினாள். ஆனால் கிழவர் பொறுமையிழந்தவராகக் கூறினார் "உனக்கு என்ன அறிவில்லையா? மளிகைக் கடைக்காரனுக்கு நீ டாக்டர் ஒபாமாவின் மகள் என்று சொல்ல வேண்டியது தானே. அவன் கடன் தருவான் என்று ஆணித்தரமாகக் கூறினார். ஔமா கடைக்குப் போய் தந்தை கூறியவாறு கேட்டாள். அவன் சிரித்துக் கொண்டே துரத்திவிட்டான்.

அவள் வீட்டுக்குப் போகப் பயந்து தனது உறவினர் ஒருவர் வீட்டுக்குப் போனாள். கிழவர் தான் அவனுக்கு உத்தியோகம் ஒன்றில் சேர்வதற்கு உதவியிருந்தார். அவன் வேண்டிய பணத்தைக் கொடுத்து ஔமா சிகரெட் வாங்கிப் போக உதவினான். கிழவரோ இவ்வளவு நேரம் ஏன் தாமதித்து வந்தாள் என்று ஏசிய வண்ணம் சிகரெட்டை ஹாயாய் அனுபவித்துக் கொண்டு கூறினார்:

"நான் உனக்கு என்ன சொன்னேன்? ஒபாமாவைத் தெரியாதவர்கள் இங்கு யாருமில்லை. ஆகையினால் உனக்கு எந்தப் பிரச்சினையும் இராது என்றேன் அல்லவா?"

ஒபாமாவுக்கு அப்பாவின் நினைவு-எதிலும் அவரின் முகம் காட்சி தந்தது. அவர் ஒபாமாவைப் பார்த்து "நீ எனக்குச் செய்ய வேண்டியது ஒன்றுண்டு, என்னை விளங்கிக்கொள். அவ்வளவு தான்" என்று கூறுவது [illegible] ஒரு பிரம்மை.

(தொடரும்)

ஜம்பொன்

# ரஷ்யா, சீனாவில் பயின்ற வைத்தியர்களை மருத்துவ கவுன்சில் ஓரம் கட்டுவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

ரஷ்யா மற்றும் சீனா உட்பட குறிப்பிட்ட சில வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் மருத்துவ பட்டப் படிப்பை பயின்று வைத்திய கலாநிதிகளாக வெளிவரும் இலங்கையர்களை இலங்கை மருத்துவ கவுன்சில் பாரபட்சமாக நடத்துவதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக படிப்பில் திறமை குறைந்தவர்களே இத்தகைய வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் அனுமதியைப் பெற்று மருத்துவ பட்டப்படிப்பை மேற் கொள்கின் றார்களென பாரதூரமான தப்பபிப் பிராயத்தை இலங் கையின் மருத்துவ துறை சார்ந்த அதிகாரிகள் கொண்டிருப்பதாக கவலை வெளியிடப்படுகிறது.

வெளிநாட்டில் மருத்துவ பட்டப் படிப்பை பூர்த்தி செய்யும் இலங்கை மாணவர்கள் இலங்கையில் விசேட பரீட்சை ஒன்றுக்குத் தோற்றி அதில் சித்தியடைய வேண்டும். அப்போது தான் இலங்கையில் அரச அங்கீகாரம் பெற்ற வைத்தியராகக் கடமையாற்ற முடியும்.

ஆனால் இப்பரீட்சையை எழுதுவதற்கான அடிப்படை உரிமை ரஷ்யா, சீனா ஆகிய நாட்டுப் பல்கலைக்கழகங்களில் பயின்ற இலங்கை மாணவர்களுக்கு மறுக்கப்படுவதாக தெரிய வருகிறது.

உலகின் பல நாடுகளும் ரஷ்யா, சீன பல்கலைக்கழகங்களின் மருத்து பட்டப்படிப்புக்கு உரிய அங்கீகாரம் வழங்கியுள்ள நிலையில் இலங்கை இவ்வாறான அங்கீகாரத்தை வழங்காமல் இருப்பது இலங்கையின் மருத்துவத் துறைக்கு பாரிய குறைபாடாகவும், இழப்பாகவும் தூர நோக்கில் அமையும் என்று சர்வதேச அவதா னிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

மேலும் இவ்விடயம் தொடர்பில் கொழும்பு ஆனந்தா கல்லூரியின் பழைய மாணவனும் ரஷ்யாவின் கசான் மருத்துவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பட்டப்படிப்பை பயின்றவருமான ஜி.எஸ் வீரவர்தன என்பவர் ஸ்ரீலங்கா மருத்துவ கவுன்சிலினாலும் சம்பந்தப்பட்ட நிறைவேற்று, நிர்வாகத் துறை சார்ந்த அதிகாரிகளாலும் அவருடைய அடிப்படை உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுவதாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் மனுவொன்றை அண்மையில் தாக்கல் செய்து உரிய நிவாரணம் பெற்றுத்தரக் கோரியுள்ளார். இம்மனு மீதான பூர்வாங்க விசாரணைகள் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு முன் இடம் பெற்று வருகிறது. (6)

# அமைச்சுப் பதவிகளை வழங்கும் தீர்மானம் மக்கள் மீதான வரிச்சுமைகளை அதிகரிக்கும்

## ஐ.தே.க. அமைப்பாளர் எஸ்.பி. கருத்து

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 110 அமைச்சர்களைப் பராமரிக்க மாதமொன்றுக்கு 10 கோடி ரூபா செலவாகும் நிலை யில் விமல் வீரவன்ச எம்.பி அணியினருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளமை மக்கள் மீதான வரிச்சுமைகளை அதிகரிக்க வழிவகுக்கும்.

நாடு பாரிய நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதோடு தொழிற்சாலைகளும் மூடுவிழாவை நடத்தும் தருணத்தில் அரசு பணத்தை விரயமாக்குவது எவ்வகையில் நியாயமாகும் என்று ஐ.தே.க.வின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திசாநாயக்க கேள்வி எழுப்பினார்.

கொழும்பில் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெிவித்ததாவது, சர்வதேச நாணய நிதியத் திடம் கடன் பெறுவதற்கான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் நடத்தியது.

ஆனால், இதுவரையில் அக்கடனுக்காக விண்ணப்பப்படிவத்தையேனும் அரசாங்கம் சமர்ப்பிக்கவில்லை. இக் கடன் தொகை கிடைக்காத நிலையிலேயே இருக்கின்றது.

பல அரசாங்க நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன. துறைமுக அதிகாரசபை ஒருபோதும் நஷ்டத்தில் இயங்கிய தில்லை. எனவே தான் இத்துறை தொடர்பான அமைச்சைப் பெற முண்டியடிப்பார்கள்.

இன்று துறைமுக அதிகார சபை 190 கோடி ரூபா நஷ்டதை எதிர்நோக்கியுள்ளது. மின்சார சபை 190 கோடி ரூபா நஷ்டத்தில் உள்ளது.

மிஹின் எயார் தினமும் 18 இலட்ச ரூபா நஷ்டத்திலேயே இயங்குகின்றது. பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 480 கோடி, நீர் வழங்கல் அதிகாரசபை 290 கோடி, இ.போ.ச 320 கோடி என அரச நிறுவனங்கள் பல வீழ்ச்சி கண்டுள்ளன.

இந்நிறுவனங்கள் அனைத்தும் இலாபத்தில் இயங்கி யவை. இன்று அரசாங்கத்தின் நிர்வாகத் திறமையின்மையால் சீரழிந்து போயுள்ளன.

தினம் தின்ம் ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வருகின்றன. பலர் தொழில்களை இழந்து வருகின்றனர்.

வெளிநாடுகளில் வாங்கிய கடன்களை திருப்பிச் செலுத்த பல கோடி ரூபாய்கள் தேவைப்படுகின்றன.

இவ்வாறு முழுநாடுமே நிதி நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

உலகில் உணவுப் பொருட்கள் மற்றும் உடைகள் உட்பட அத்தியாவசியப்பொருட்களின் விலைகள் குறைந்து கொண்டே வருகின்றன.

ஆனால், இங்கு தினம் தினம் விலைகள் அதிகரிக்கின்றன. இதற்குக் காரணம் மக்கள் மீது சுமத்தப்படும் புதுப்புது வரிகளாகும்.

இன்று யுத்தம் முடிந்து விட்டது. எனவே அதற்காக செல வழித்த தொகையை மக்களுக்கு சலுகையாக வழங்கலாம்.

ஆனால், அரசாங்கம் நிதி நெருக்கடிகள் எதனையும் கண்டுகொள்வதில்லை.

தினம் தினம் வீணான செலவுகளை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

நாட்டைப் பற்றி எந்தக் கவலையும் அரசுக்கு கிடையாது. எனவே தான், 110 ஆக இருக்கும் அமைச்சர்களின் தொகையை மேலும் மேலும் அதிகரிக்க முயற்சிக்கின்றது. (6)

# மூன்று புதிய வெளிநாட்டு முதலீடுகளுக்கு முதலீட்டுச் சபை அங்கீகாரம்

## ஒரு மாதத்தில் நிர்மாணப் பணிகள் ஆரம்பம்

(கொழும்பு)

மூன்று புதிய வெளிநாட்டு முதலீடுகளுக்கு இலங்கை முதலீட்டுச் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இம்மூன்று முதலீடுகளும் 171 மில்லியன் ரூபாவைக் கொண்டதாக உள்ளதுடன் இதில் ஒன்று ஆடை தயாரிக்கும் தொழிற்சாலைக்கானதாக உள்ளது.

இத்தொழிற்சாலை மூலம் 250 பேருக்கு தொழில் வாய்ப்புகள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. 45 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படும் இத்தொழிற்சாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் ஆடைகள் அமெரிக்கா மற்றும் ஐரோப் பிய நாடுகளுக்கு ஏற்று மதி செய்யப் படவுள்ளன.

இதேவேளை ஆடை உற்பத்தி சார்ந்த மற்றுமொரு தொழிற்சாலை 57 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது.

பொரளஸ்கமுவ பகுதியில் 69 மில்லியன் ரூபா செலவில் மற்றுமொரு தொழிற்சாலையை நிறுவ இலங்கை முதலீட்டுச் சபை அனுமதியளித்துள்ளது.

பொருட்கள் பொதி செய்யும் இதன் மூலம் 100 பேருக்கு தொழில் வாய்ப்புக் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. (6)

# இலங்கையின் 2 ஆவது சர்வதேச விமான நிலையம் திஸ்ஸ மகாராமயில் நிர்மாணம்

(கொழும்பு)

இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையம் திஸ்ஸ மகாராம பிரதேசத்தைச் சேர்ந்த உடமத்தலாவப் பகுதியில் நிர்மாணிக்கப்படுகிறது.

இந்த விமான நிலையத்தின் பெயர் தகஷின் லங்கா சர்வதேச விமான நிலையம் என்பதாகும்.

இதன் நிர்மாணப்பணிகள் இரண்டு கட்டமாக இடம்பெறவுள் ளதுடன் 3 ஆண்டுகளில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

முதலாம் கட்ட நிர்மாணப் பணிகளுக்காக 2000 கோடி செலவிடப் படவிருக்கிறது. (6)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

## ஐந்தாம் நாள்

## இடர்களைத் தீர்த்தருளும் தாயே

நிகரில்லா நிர்மல சொரூபினியே – நயினை
புகழோங்கும் திருக்கோவில் சிவகாமியே
நேயத்தால் நிறைந்த செல்வியே
வல்லமை தந்தருளும் வனிதா மணியே
செல்லவழி காட்டிடும் நாகபூஷணித்தாயே
அடியார்க்கு அருளோங்கும் அபிராமியே
நாகபூஷணியே சிம்ம வாகினியே
இடர்களைத் தீர்த்தருள்வாய் தாயே!

திருமதி. செ. பாக்கியநாதன்
சங்கானை

## நற்கதியில் சேர்ப்பாய் தாயே

சங்கரனைச் சந்ததமும் பிரிந்திடாத தேவி
ஐங்கரன் வேலவனை அணைத்திருப்பாய் தாவி
திங்களுடன் தினகரனும் தினமும் சேவை செய்ய
பொங்குகடல் நடுவினிலே வலம் வருவாய் பைய
சிங்கமதில் ஏறிவரும் நைனைப் பதித் தாயே
மங்கலங்கள் யாவும் எமக்கீந்திடுவாய் நீயே
எங்கள் இனம் பட்ட துயர் இனியாகிலும் தீர்ப்பாய்
அங்கையற்கண் உமையவளே நற்கதியில் சேர்ப்பாய்

தமிழுக்கடியவன்

## நம்மவரை காத்திடுவாய்

அறுபத்து நான்கு சக்தி பீடங்களில்
நயினையும் ஒரு பீடமாய்
தெல்லியூரில் துர்க்கை அம்மனாய்
மதுரையில் மீனாட்சியாய்
காஞ்சியில் காமாட்சியாய்
பலவாறு அவதாரம் எடுத்து
நம்மவரை காக்க நயினையிலே
நாகபூஷணியாய் அமர்ந்தவள் நீ அம்மா

விநாயகன் டினேஸ்கரன்
வல்வெட்டித்துறை.

## வரம் தாருமம்மா

வேல் விழியாளே மின்சாரக்கண்ணாத்தா
எந்த மதத்தினர்க்கும் தாயானவளே கருணைத்தாயே
உலகாளும் அன்னையே நான் உனையாசிக்கிறேன்
வழிமீது விழி வைத்தேன் வரம் தாருமம்மா
அன்ன பூரணியே எம்மினபசி போக்கிடுவாய் தாயே
காயத்திரியே எம்மவர் பிணி நீக்கிடுவாய் தாயே
நாகதாயே தொலைந்த உறவுகள் ஒன்று சேர்த்திடு தாயே
மங்கள தாயே உலகெங்கும் சர்வமங்களம் பொழி தாயே

ஆ. இந்திரா - வதிரி.

## பார்த்தருள் உன் பிள்ளைகளல்லவா?

அலையாடும் கடல் நடுவே
அருளாடும் நயினை தனில்
கலையாடும் கவின் கோயிலுறை
கற்பகமே, காவியமே, கைலை
மலையான் மகிழும் மாதவமே,
மங்கலமே, எங்கள் நீள்துயர்
நிலை மாற, இன்பம் நிமிர்ந்தோங்க,
நீயாடி வரவேணும் எம் அம்மே
கோடி முத்தம் தந்தே
கும்பிட்டுக் கூத்தாடும் அலை நடுவே
நாடி வரும் அன்பர்க்கு
நன்மை தர நயினையிலே அமர்ந்தவளே
வாடி வருந்தும் மக்கள்
வருத்தம் யாவும் தீர, அவர் வளமுறப்
பாடி உனைப் பணிகிறோம்
பார்த்தருளிடு, உன் பிள்ளைகளல்லவா?

தி. மயூரகிரி - நீர்வை.

# அமெரிக்க ஏவுகணை தாக்குதலில் தலிபான் கமாண்டர் உசேன் பலி

(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தானில் தெற்கு வாசிரிஸ்தான் பகுதியில் நடந்த அமெரிக்க ஏவுகணைத் தாக்குதலில், தலிபான் கமாண்டர் குவாரி உசேன் கொல்லப்பட்டார்.

இதுகுறித்து, பாகிஸ் தானின் டான் பத்திரிகையில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது, பாகிஸ்தானின் தெற்கு வாசிரிஸ்தான் பகுதியில் அமெரிக்க ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், டெக்ரிக் -இ- தலிபான் இயக்க கமாண்டரான குவாரி உசேன் கொல்லப்பட்டார். இவர், டெக்ரிக் -இ- தலிபான் இயக்கத் தலைவர் பைதுல்லாவிற்கு அடுத்து அவ்வியக்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்பார் என எதிர்பார்க்கப்பட்டவர்.

குவாரி உசேனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள வந்த தலிபான் இயக்கத் தலைவர் பைதுல்லா, அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இருந்து நூலிழையில் உயிர் தப்பித்தார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில், தலிபான் கமாண்டர் சங்கீன் சத்ரன் கொல்லப்பட்டதாக வெளியான தகவலை அவ்வியக்கத்தினர் மறுத்துள்ளனர். (6)

# பிலிப்பைன்ஸை தாக்கிய 'நங்கா' புயல் 8 பேர் பலி ; 11 பேரைக் காணவில்லை

(மணிலா)



வட பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'நங்கா' புயல்காரணமாக குறைந்தது 8 பேர் பலியானதுடன் 11 பேர் காணாமல் போயுள்ளனர்.

மணிக்கு 56 கிலோமீற்றர் வேகத்தில் நகர்ந்த இந்த புயலால் பாரிய மண்சரிவு ஏற்பட்டதுடன் படகுகள் பலவும் கவிழ்ந்துள்ளன. இந்நிலையில் புயல் எச்சரிக்கையை யடுத்து நூற்றுக் கணக்கான படகுகள் கரை திரும்ப முடியாத நிலையில் பாது காப்பான இடங்களில் தரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புயலுடன் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக தென் சுகயன் டி ஒரோ நகரில் பாரிய மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த மண்சரிவில் வீடொன்றிலிருந்த இருவர் புதையுண்டுள்ளனர். அதேசமயம் குவேஸன் மாகாணத்தில் மீன்பிடிப்பட கொன்று புயலில் சிக்கியதில் அப்படகிலிருந்த 6 மீனவர் களில் நால்வர் பலியானதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

மத்திய செபு மாகாணத்தில் இரு மீனவர்கள் கடலில் மூழ்கியுள்ளதுடன் 11 பேர் காணாமல் போயுள்ளனர். (6)

# ஈரானின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாதீர்கள் ஒபாமாவுக்கு ஈரான் ஜனாதிபதி எச்சரிக்கை

(டெக்ரான்)

ஈரான் நாட்டு ஜனாதிபதித் தேர்தலில் முறைகேடு நடந்ததாகக் கூறி அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நடந்து வரும் போராட்டத்தில் அந்த நாட்டு அரசாங்கம் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கியுள்ளது.

போராட்டம் ஒடுக்கப்பட்ட விதம் குறித்து விமர்சித்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அதற்கு கண்டனம் தெரிவித்தார். இதற்கு ஈரான் ஜனாதிபதி அகமட் நிஜாத் எதிர்ப்பு தெரிவித்தார். ஈரானின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடாதீர்கள் என்று அவர் ஒபாமாவை எச்சரித்தார். எங்கள் நாட்டு தேர்தல் பற்றி விமர்சித்ததன் மூலம் ஒபாமா தவறு செய்து விட்டார். அவர் ஏன் எதிர்க்கட்சிகள் விரித்த வலையில் விழுந்தார் என்பது தான் எங்கள் முன் இருக்கும் கேள்வி என்று அகமட் நிஜாத் கூறினார். (6)

# பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் காலமானார்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)



பிரபல பொப்பிசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் (வயது 50) காலமானார். இருதயக் கோளாறு நோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர் அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள மருத்துவமனையில் வியாழக்கிழமை காலை உள்ளூர் நேரப்படி 7.26 மணிக்கு காலமானார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. அவரை மருத்துவமனைக்குக் கொண்டு வரும் போதே சுவாசம் நின்றுவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

மாரடைப்பால் அவர் இறந்ததாகத் தற்போது கூறப்பட்டாலும் பிரேத பரிசோதனை நடத்திய பிறகே சரியான காரணம் தெரியவரும். மருத்துவமனையின் முன்பு அவரது ரசிகர்கள் பெருந்திரளாக கூடியுள்ளனர். ஜாக்சனின் மரணம், அவரது ரசிகர்களை மீளாத சோகக் கடலில் ஆழ்த்தியுள்ளது. (6)

# கொசோவோ முன்னாள் பிரதமர் சர்வதேச பிடியாணையின் கீழ் பல்கேரியாவில் கைது

முன்னாள் கொசோவோ பிரதமர் அகிம் செகு பல்கேரியாவில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சேர்பியாவால் பிறப்பிக்கப்பட்ட சர்வதேச பிடியாணையொன்றுக்கு அமைவாகவே அவரது கைது இடம்பெற்றுள்ளது.

அகிம் செகு மசிடோனியாவிலிருந்து எல்லையைக் கடந்து பல்கேரியாவுக்குள் பிரவேசித்த போதே அவரைக் கைது செய்துள்ளதாக பல்கேரிய உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

வோ விடுதலை இராணுவத்தில் கட்டளைத் தளபதியாகக் கடமையாற்றினார்.

அரசியல் உள்நோக்கம் கருதிச் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு அவர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

மேற்படி பிடியாணையானது சட்ட அடிப்படை எதனையும் கொண்டிருக்கவில்லை என அகிம் செகு குற்றஞ்சாட்டினார்.

அவர் கடந்த மாதம் சேர்பியா அவரைக் கைதுசெய்ய வலியுறுத்தியதையடுத்து, கொலம்பியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார். அவர் ஏற்கனவே 2006 ஆம் ஆண்டில்




1998 -99 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் அகிம் செகு யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டதாக சேர்பியா குற்றம் சாட்டியுள்ளது.

அக்கால கட்டத்தில் அவர் சேர்பியாவுக்கு எதிராகப் போராடிய அல்பேனிய கொசோ ஸ்லோவேனியா மற்றும் ஹங்கேரியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொசோவா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் சுதந்திர நாடாகத் தன்னைத் தானே பிரகடனப்படுத்திக் கொண்டது. (6)

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த — ஒபாமாவின் புதிய முயற்சி —

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் புகையிலை பொருள்களுக்கு தடைவிதிக்க அரசுக்கு அதிகாரமளிக்கும் சட்டமூலத்துக்கு அதிபர் ஒபாமா ஒப்புதல் அளித்துள்ளார். ஒபாமாவின் ஒப்புதலை அடுத்து அந்த சட்டமூலம் சட்டமாகியுள்ளது.

இதன்மூலம் அமெரிக்காவில் ஏற்கனவே புகையிலை பழக்கத்துக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்கவும், புதிதாக புகையிலைக்கு யாரும் அடிமையாகாமல் பாதுகாக்கவும் வழி ஏற்பட்டுள்ளது. இதனால் ஒபாமாவின் சுய முயற்சியால் எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அமெரிக்காவில் புகையிலை பயன்பாடு குறித்து அண்மையில் ஆய்வு நடத்தப்பட்டது. அதில் அங்கு தினசரி 18 வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் ஆயிரம் பேர் புதிதாக புகையிலை பழக்கத்துக்கு ஆளாகிறார்கள் என்பது தெரிய வந்தது.

இந்த அதிர்ச்சி தகவலே புகையிலை பொருள்களுக்கு தடை விதிக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கும் சட்டத்தை ஒபாமா துணிந்து, துரிதமாக கொண்டுவரக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஈராக் சந்தையில் குண்டு வெடிப்பு 70 பேர் பலி; 130 பேர் காயம்

(பக்தாத்)

ஈராக்கின் பக்தாத் நகரில் சந்தையொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது 70 பேர் பலியானதுடன் 130 பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.



குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த மரக்கறி வண்டி

இக்குண்டு வெடிப்பானது ஈராக்கில் இந்த வருடத்தில் இடம்பெற்ற மிக மோசமான குண்டு வெடிப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

மேற்படி குண்டுவெடிப்பானது புதன் கிழமை அந் நாட்டு நேரப்படி இரவு 7.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

விற்பனைக்காக மரக்கறிகளை ஏற்றிச் சென்ற மோட்டார் வண்டியொன்றில் இந்த குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்து வெடிக்க வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கப்படையினர் ஈராக்கின் அனைத்து நகரங்களிலுமிருந்து வாபஸ் பெறுவதற்கு ஒரு வாரங் கூட இல்லாத நிலையில் இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

குண்டு வெடிப்பையடுத்து சந்தையிலிருந்த கடைத்தொகுதிகளும் வாகனங்களும் தீப்பற்றி எரிந்ததால் எங்கும் புகை மூட்டமாக காணப்பட்டது.

ஈராக்கில் அதிகாரிகளுடனான ஒப்பந்த மொன்றின் பிரகாரம் அந் நாட்டின் நிலை கொண்டுள்ள ஒரு இலட்சத்து 33 ஆயிரம் அமெரிக்கப் படையினரில் அநேகமானவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை வாபஸ் பெறவுள்ளார்கள்.

ஈராக்கிலான அமெரிக்கப் படையினரின் படை நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் ஆண்டு செப்டெம்பர் மாதத்துக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்படவுள்ளதுடன் 2011 ஆம் ஆண்டின் இறுதிக்குள் ஈராக்கிலுள்ள அனைத்து அமெரிக்கப் படையினரும் அந் நாட்டை விட்டு வெளியேறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# உங்கள் தேவையை வலது காதில் கூறினால் நிறைவேறும்

## இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு



''உங்களுக்கு ஒருவரிடமிருந்து ஏதாவது காரியம் ஆக வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களா? உங்கள் தேவையை அவரது வலது காதில் கூறுங்கள்.

உங்கள் தேவை நிறைவேறிவிடும்'' என இத்தாலிய ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒருவரது இடது காதை விட வலது காதானது கோரிக்கைகளை சிறந்த முறையில் செவிமடுத்து அது தொடர்பான செய்திகளை மூளைக்கு துரிதமாக எடுத்துச் செல்வது மூன்று தொடர் ஆராய்ச்சிகள் மூலம் நிரூபணமாகியுள்ளதாக இத்தாலியின் சியட்டி நகரிலுள்ள கப்ரிய லேடி அன்னுன் ஸியோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களான கலாநிதி லூகா தொம்மாஸி மற்றும் டானியலே மர்ஸோலி ஆகியோர் தெரிவித்தனர்.

ஒருவரது வாய் வார்த்தைகளை திறம்பட செவிமடுக்கும் வலது காதானது வாய் மூல தகவல் செயற் கிரமங்களுக்குரிய மூளையின் இடதுபக்கத்தில் பிரதிபலிப்பை ஏற்படுத்துவதாக அவர்கள் கூறுகின்றனர். (6)

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

9-II

**பட்டினிச் சாவு யாரை விட்டது?**

அயர்லாந்தும் வங்கதேசமும் சந்தித்த பட்டினிச் சாவு ஏனைய நாடுகளையும் வாட்டி யெடுத்தது. ஆனால் ஒவ்வொரு இடத்திலும் காரணங்கள் வேறாக இருந்தன. உணவுக் காக இலட்சக் கணக்கில் மக்கள் இறந்த கோர நிகழ்வுகள் மாற்ற வழிதேட உந்துதல் கொடுத் தன.

அழிவொன்றின் பின்னரான உதயமா கவே இவை கருதப்பட்டன. அதனடிப்படையி லேயே பசும்மைப் புரட்சி என்ற கருத்து உதய மானது. இக்கருத்து முன்னுரைக்கப்பட்ட போதிலும் உடனடியாக எந்த விளைவுகளும் ஏற்படவில்லை.

பஞ்சமும் பட்டினியும் சில நாடுகளில் கோரத்தாண்டவமாடின. 1958 தொடக்கம் 1962ஆம் ஆண்டிற்கிடையில் சீனாவில் கிட்டத்தட்ட 30 மில்லியன் மக்களும் 1972 இலிருந்து 1975 வரையான காலப்பகுதியில் எதியோப்பியாவில் 2 இலட்சம் மக்களும் இதே காலப்பகுதியில் 1.5 மில்லியன் மக்கள் பங்களாதேசிலும் பட்டினியால் மடிந்தனர் என்பதை வரலாறு கோடிட்டுக் காட்டுகின்றது.

**பட்டினிச் சாவிலிருந்து மக்களைக் காப்பாற்றிய பசுமைப் புரட்சி**

கொடிய இந்த அவலச் சாவிலிருந்து மக் களைக் காப்பாற்ற, அவர்களுக்கு உண்ண உணவளித்த பெருமை பசுமைப் புரட்சி யையே சாரும். உற்பத்தியான பொருட்களின் விளைச்சலை பலமடங்கு உயர்த்தி தன் பங்குக்கு பசுமைப் புரட்சி பெருமை சேர்த்துக் கொண்டது எனலாம்.

**பசுமைப் புரட்சியின் தந்தை - கலாநிதி நோர்மன் போர்லாக்**

**(Dr. Norman Porlak)**

தாவர பிறப்பாக்கவியல் ஆய்வாளரான கலாநிதி நோர்மன் போர்லாக் என்பவரின் எண்ணத்தில் உதித்ததே பசுமைப் புரட்சி (Green Revolution) இதற்காக இவருக்கு 1972 ஆம் ஆண்டு உணவுற்பத்தி மற்றும் பட்டினியொழிப்பு என்பதற்காக நோபல் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதனால் இவரை பசுமைப் புரட்சியின் தந்தை என வர்ணிப்பார்கள்.

**நெல்-கோதுமை-சோளம்**

உலகளாவிய ரீதியில் அடிப்படை தானி யப் பயிராகவும் அனைவரும் உண்ணும் தானியங்களுமாக அமைந்த நெல், கோது மை, மற்றும் சோளம் ஆகிய மூன்று தானி யப் பயிர்களுக்கும் ஆரம்பத்தில் முன்னுரி




மையளிக்கப்பட்டது. இத்தானியப் பயிர்களில் காணப்பட்ட உள்ளூர் இனங்கள் பல குணா திசயங்களை கொண்டிருந்ததும் அவற்றி னது விளைச்சல் மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தமையால் கலப்பினப் பயிரினங்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

புதிய அதிக விளைச்சல் தரக்கூடிய இனங் கள் உற்பத்தி செய்யப்பட்டு பரீட்சிக்கப்பட்டு வெற்றியளித்தன. இவ்வாறான ஆய்வுகளுக் காக நெற்பயிருக்கென உலக நெல் ஆராய் ச்சி நிறுவனம் பிலிப்பைன்சு நாட்டிலுள்ள மனிலா என்ற இடத்திலும் கோதுமை, சோளம் ஆகிய இரண்டு பயிர்களுக்கான உலக ஆய்வு நிறுவனம் மெக்சிக்கோ என்னுமிடத் திலும் நிறுவப்பட்டன.

ஆய்வுகள் பல்வேறு வகைகளில் முடுக்கி விடப்பட்டன. விளைச்சல் அதிகரித்தது. அனை த்து கலப்பினங்களும் உள்ளீடுகளை நம் பியே வளர்ந்தன, வளர்க்கப்பட்டன. இங்கே தான் பிரச்சனையும் உருவானது.

பயிர்ச் செய்கையில் இவ்வாறாக ஏற்பட்ட தொடர்ச்சியான உற்பத்தி சரிவு காரணமாக இன்னும் கூறினால் முற்று முழுதாக அழி வுற்றதனால் மிகவும் அதிகமான எண்ணிக் கையில் மக்கள் அநியாயமாக இறக்கநேரிட் டது என்றும் மனித வரலாற்றில் மறக்க முடியாத துன்பியல் நிகழ்வுகளாக பதிவாகி விட்டது.

வேளாண் செய்கை வரலாற்றில் இவை யெல்லாம் அடுத்த சந்ததிக்கான படிப்பினை யாகிவிட்ட நிலையில் பசுமைப் புரட்சி என்ற வொரு மீளவுயிர்கொடுத்த அத்தியாயத் தினை ஒருமுறை திரும்பிப் பார்ப்பதற்கொரு சந்தர்ப்பம் கொடுத்தது.

பசுமைப் புரட்சியின் தந்தையாக வர் ணிக்கப்படும் கலாநிதி நோபின் போர்லாக் என்னுமொரு மகா மேதையை இவ்வுலகம் இனங் கண்டு கொள்ளவும் வசதி செய்து கொடுத்தது.

அவருக்கு இப்போது வயது 92. தன் னுடைய பெறுமதிமிக்க, பசுமையில் புரட்சிக்கு அடித்தளமிட்ட ஆற்றல் மிகு செயற்பாட்டின் அறுவடையை 49 ஆண்டுகள் கழிந்த நிலை யில் அறுவடை செய்திருக்கிறார். இப்பெரி யாரின் எண்ணமாகவும் இனியொரு பசு மைப் புரட்சியின் தேவை வலியுறுத் தப்பட்டி ருக்கின்றது.

பசுமைப் புரட்சி என்பது கருவாக உதித்த காலங்களில் அதனது நோக்கம் பெரிதாக செயலுருப் பெற்றிருக்கவில்லை. வழக்கமாக விஞ்ஞான உலகம் இதில் கரிசனை காட்டாது "பசுமைப் புரட்சியாமே!" என எள்ளி நகை யாடியதாம்.

அதில் உட்பொதிந்ததன் அர்தத்தை, தீர்க்கமான சிந்தனைக் கருத்தை, அதனது தாற்பரியத்தை, சொல்ல வந்த செய்தியை கால வோட்டத்திலேயே பலரும் விளங்கிக் கொண்டனர்.

வழக்கமாக புத்திஜீவிகள் மட்டத்தில் நிக ழும் செயற்பாடுதான். என்றாலும் இம்மாதிரி யான எதிர்கால வளர்ச்சிக்கான புரட்சிகர மானதும் நிச்சயமாக நடந்தேற வேண்டிய துமான செயற்றிட்டத்தினையும் ஒரு கூட்டம் குறை கூறியே தட்டிக் கழித்தது.

பசுமைப் புரட்சியென்பது சுய இலாப த்திற் கென வெறுமனே உதித்த பதமல்ல. போர் லாக் அவர்களது விஞ்ஞான ஆய்வுகளின் முடிவாக எழுந்த, எதிர்கால வளமா க்கலுக்கான தீர்க்க தரிசனமான சிந்த னையின் வெளிப் பாடாகும். உண்டிகொ டுத்து உயிர் காத்த காத்திரமான கொள் கையல்லவா அது!



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**தந்தையின் கனவு பலித்தது.**

கத்தியின்றி சத்தமின்றி இரத்தமென்ற எதுவுமின்றி உலக மக்களனைவரும் பசு மை மேம்பட இணைந்து ஆற்றிய உலகம் வியக் கவைத்த கைங்கரியமிது. தனித்தொருவரோ அல்லது ஒரு கூட்டமோ இதனைச் செய்தி ருக்க வாய்ப்பில்லை.

உயிருக்கு போராடிய உணவு தேடியோ டிய மக்களைக் கருவிகளாக்கி அவர்களுக்கு விஞ்ஞான அறிவை போதித்து அம்மக்களின் மூலமாக இதனை ஒப்பேற்றிய பெருமை பசு மைப் புரட்சியின் தந்தையைச் சாரும். அவர் கண்ட கனவு பலித்தது. அதிசயத்தில் ஒன்றா கவே பின்னர் அது கருதப்பட்டது.


வாழும் அனைத்து மனிதருக்கும் உண்ண உணவு கொடுக்க ஒருமித்த உழைப்பு தேவை ப்பட்டது. போட்டியென்ற தேவை எழ வாய்ப்பி ருக்கவில்லை. அதனால் உலகம் ஒன்றிணை ந்தது. உற்பத்தி பன்மடங்காகப் பெருகியது. உணவு தேடி ஓடி அலைந்த அன்றாடம் உண விற்கு அவதிப்பட்ட மக்களுக்கு இவ்வா றான உற்பத்தியின் எழுச்சி ஆறுதல் தந்ததென் றால் மிகையாகாது. விஞ்ஞானத்தைத் திறவு கோலாக்கி நடந்ததொரு அற்புதமான எழுச்சி யாகவே "பசுமைப் புரட்சி" நோக்கப்பட்டது. அங்கே தான் பசுமை மேம்பாட்டிற்கான அடித் தளமும் இடப்பட்டது. (தொடரும்)

# திண்மக் கழிவுகளும் அவற்றை முகாமைத்துவப்படுத்தலும்

தீண்மக்கழிவுகளின் முறையற்ற முகா மைத்துவத்தின் விளைவாக, நாம் தற்பொ ழுது பல்வேறுபட்ட சூழலியல் பிரச்சினை களை எதிர்நோக்குகின்றோம். சனத்தொகை பெருக்கத்தாலும் பல்வேறுபட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளாலும் உருவாகும் திண்மக் கழிவானது ஒரு வளர்ந்து வரும் பிரச்சினை யாகவே உருவெடுத்துள்ளது.

எனவே தான் க்ழிவு முகாமைத்துவம் மக்களின் விழிப்புணர்வுடன் உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டும்.

முதலில் நாம் திண்மக்கழிவுகளின் பிர தான வகைகளை அறிந்து கொள்வது முக்கி யமாகும்.





இவ்வாறு பல்வேறுபட்ட வழிகளிலும் உரு வாகும் திண்மக்கழிவுகள் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். திண்மக்கழிவுகளை பின்வரும் முறைகள் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட முடியும்.

மீள்பயன்பாடு (Reuse)
குறைத்தல் (Reduce)
மீள் சுழற்சி (Recycle)
கூட்டுப்பசளையாக்கல் (Composting)
திறந்த முகாமைத்துவம் (Open dumping)

மேற்குறிப்பிடப்பட்ட கழிவு முகாமைத்துவ முறைகளில் கூட்டுப்பசளையாக்கலானது சூழலுடன் இசைவுபட்ட (eco-friendly) முகா மைத்துவ முறையாகும்.

உரிய முறையில் திண்மக்கழிவுகளில் காணப்படும். உக்கக் கூடிய சேதனப்பகுதியை (Decomposable organic fraction) கூட்டுப் பசளையாக மாற்ற முடியும். கூட்டுப்பசளை உருவாக்கமானது நுண்ணங்கிகளின் தொழிற் பாட்டில் பிரதானமாக தங்கியிருப்பதால் அவற்றின் தொழிற்பாட்டிற்கு தேவையான நீர் மற்றும் ஒட்சிசன் உரிய முறையில் வழங் கப்படுதல் வேண்டும்.

நாம் யாழ். மாநகரபை எல்லைக்குட்பட்ட பகுதியில் திண்மக் கழிவுகளின் சேகரிக்கும் அளவு எவ்வாறு மாறுபடுகிறது என்பதை பின்வ ரும் வரைபு மூலம் அறிந்து கொள்ள முடியும்.




மேற்குறிப்பிட்ட வரைபிலிருந்து பின்வ ரும் முடிபிற்கு வர முடியும். அதாவது உரு வாக்கப்படும் திண்மக்கழிவுகளில் சேகரிக்கப் படும் பகுதியானது 2005 இலிருந்து 2008 ஆம் ஆண்டுகளுக்கு இடையிலான பாரிய வேறுபாட்டை காண்பிக்கவில்லை. எனினும் 2005 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட திண் மக்கழிவின் அளவு சற்று அதிகமாகும். ஏனெ னில் அவ்வாண்டில் சில தனியார் நிறுவனங் களின் பங்களிப்பு காரணமாக சேகரிப்பதற் கான இயந்திர வலு (Mechinary Power for collection) அதிகளவில் பயன்படுத்தப்பட்டது.

எனவே ஆளணிவலு (Man Power) இயந் திரவலு ஆகியவற்றை அதிகரிப்பதன் மூலம் உருவாக்கப்படும் கழிவின் பெரும்பகுதியைச் சேகரிக்க முடியும். ஒரு வருடத்தில் திண்மக் கழிவுகளின் உருவாக்கமானது வருடத்தின் முற்பகுதியிலும் இறுதிப் பகுதியிலும் அதிக மாக காணப்படும் என்பதை அறியலாம்.

இலையுதிர் காலப்பகுதியில் உருவாகும் திண்மக்கழிவுகள் இவ்வதிகரிப்பில் அதிக பங்களிப்பைச் செய்கின்றன. நாம் இங்கு ஒரு விடயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது இவ்வாறு உருவாகும் திண்மக் கழி வுகளில் உக்கக் கூடிய சேதனப் பகுதியின் அளவு அதிகம். ஆகவே இப்பகுதி இலகுவில் கூட்டுப் பசளையாக மாற்றப்பட முடியும்.

கூட்டுப் பசளையை உருவாக்கும் பொழுது மாநகர திண்மக் கழிவுகள் முதலில் வேறு பிரிக்கப்பட வேண்டும். எனவே பொதுமக் களை விழிப்புணர்வடையச்செய் வதன் மூலம் கழிவுகளை ஆரம்பத்திலேயே தனித் தனி யாக ஒன்று சேர்க்க முடியும். எனவே கழிவு வேறு பிரித்தலில் செலவாகும் மனித வலுவை இயன்றளவு குறைக்க முடியும். இலங்கை யில் வேறுபட்ட திண்மக் கழிவுகளை சேகரிப் பதற்காக நிறக்குறியீடுகளும் பயன்படுத்தப் படுகின்றன. அவையாவன.

பச்சை : உக்கக்கூடிய சேதனக்கழிவு
நீலம் : கடதாசி
செம்மஞ்சள் : பிளாஸ்ரிக்
கபிலம் : உலோகம்
சிவப்பு : கண்ணாடி

மாநகரக் கழிவுகளில் காணப்படும் வைத் தியசாலைக் கழிவுகள் (Hospital wastes) கொல்களக்கழிவு (Slaughter house waste) ஆகியவை அதிகளவு தொற்றும் தன்மை (Infechous nature) உள்ளவையாக இருப்ப தால் இக்கழிவுகள் உரிய முறையில் சூழலில் இருந்து விரைந்து அகற்றப்பட வேண்டும். யாழ். மாநகரசபைகுட்பட்ட எல்லையில் உரு வாகும் இவ்வகையான கழிவுகள் கல்லுண் டாய் வெளியில் புதைக்கப்படுகின்றன. எவ் வாறாயினும் அபிவிருத்தி அடைந்த நாடுக ளில் இக்கழிவுகள் சில காற்று வாழ் நுண் ணங்கிகளை (Aerobic Microbes) பயன்படு த்தி தொற்று நீக்கம் (Disinfection) செய்யப் பட்ட பின் மின் உலைகளின் மூலம் எரிக்கப்ப டுகின்றன (incineration). ஆகவே இவ்வாறு வேறுபட்ட வழிகளில் உருவாக்கப்படும் வேறு

**கண்ணன்**
இறுதியாண்டு மாணவன்,
விவசாய இயந்திரவியல் (சிறப்பு)
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

பட்ட வகையான திண்மக்கழிவுகள் உரிய முறையில் முகாமைத்துவம் செய்யப் படுவது இன்றியமையாததாகும்.

ஏனெனில், கழிவுகளின் ஒன்று சேர்கை யால் சூழல் பாதிப்பு அதிகமாக ஏற்பட வாய்ப் புகள் அதிகம். மாநகரக் கழிவுகளில் இருந்து கூட்டுப் பசளையை உருவாக்குவதன் மூலம் எமது சூழலை பாதுகாப்பது மட்டுமன்றி சேத னப் பசளையை உருவாக்கி விவசாயத்துறை யில் சேதன விவசாயத்தை (Organic farming) வலிமையுறச் செய்ய முடியும். சேதன விவசா யமானது தற்பொழுது மனித உட்றசுகாதா ரத்தை பேணுவதற்கு இன்றியமையாததாயி ருப்பது மறுக்கப்பட முடியாது உண்மையாகும்.

பாலங்களைக் கட்டுவதற்குப் பதில் சுவர்களை அமைத்து விடுவதால்தான் பல மனிதர்கள் தனித்து விடப்படுகிறார்கள்.

– இந்தியா

வலம்புரி

## பின்னையிட்ட தீ தென்னிலங்கையில் அதன் பின்னையிட்ட தீ பத்திரிகைக்கோ!

25.06.2009 அன்று அதிகாலை வேளை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று பத்திரிகைகளும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இனந்தெரியாத நபர்கள் இதனைச் செய்ததாக கூறப்படுகிறது. எனினும் இது விடயத்தில் நாம் உடன்பாடானவர்கள் அல்ல.

'இனந்தெரியாத' என்ற சொற்பதம் நாட்டில் நடந்த பெரும் அழிவுகளிலும் அட்டூழியங்களிலும் நீண்டகாலம் உதவி புரிந்தது. அதன் தொடர்ச்சி நீடிப்பது விருப்புக்குரியதல்ல.

'இனந்தெரியாத' என்ற பதம் இந்த நாட்டிலிருந்து என்று இனந்தெரியாமல் போகின்றதோ அன்றுதான் நிலைத்த சமாதானம் கிடைக்கும்.

எதுவாயினும் நாம் விளக்கம்,வியாக்கியானம் செய்யவிரும்பவில்லை. எங்கள் நியாயமான பார்வைக்கு அவை தவறான அர்த்தத்தைக் கொடுத்து விடக் கூடியவை.

எனவே அவற்றை அப்படியே விட்டுவிடலாம். ஆனால் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் மூன்று பத்திரிகைகளும் நேற்று முன்தினம் எரிக்கப்பட்டது எதற்காக என்ற கேள்வி புரியாத புதிராகவே உள்ளது.

பத்திரிகைகள் எரிக்கப்பட்டதற்குப் பல காரணங்களை பலரும் கூறலாம். உண்மைக் காரணம் எது என்பதை கண்டறிவதே மெய்யறிவு.

அப்படியானால் உண்மையைக் கண்டறியும் பொறுப்பு யாருடையது? எவ்வளவு காலத்திற்குள் உண்மை கண்டறியப்படும்?

முன்பெல்லாம் உண்மைகள் கண்டறியப்பட்டனவா என்ற வினாக்களின் மத்தியில் விசாரணைகள், முறைப்பாடுகள் எதுவுமே அர்த்தமற்றவையாகின்றன.

பத்திரிகைகள் எரிக்கப்பட்டதன் பின்னணியில் 'நாட்டைக்காக்கும் தமிழர் கூட்டமைப்பு' வெளியிட்ட துண்டுப் பிரசுரம் பிரசுரிக்கப்படாமையே காரணம் எனக் கூறப்படுகிறது.

நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட அமைப்பன்று.

அது எங்குள்ளது என்பது எவருக்குமே தெரியாதது. இவ்விதம் முகவரியில்லாத–யாருமே உரிமை கோராத பெயரில் வெளியான துண்டுப் பிரசுரத்தை வெளியிடுவதென்பது ஏற்புடையதல்ல.

நாட்டை காக்கும் தமிழர் கூட்டமைப்பு வெளியிட்ட துண்டுப் பிரசுரம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானதென்பதால் அதனை பிரசுரிக்கும் போது உரியவர்கள் மௌனம் காக்கின்றனர்.

மாறாக நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு வெளியிட்ட துண்டுப் பிரசுரம் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானதாக இருந்தால் –அதனை பத்திரிகைகள் பிரசுரித்தால் நிலைமை என்னவாகும்?

இனந்தெரியாத அமைப்பு வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தை என்ன ஆதாரம் கொண்டு பிரசுரித்தீர்கள் என்ற கேள்வி எழும் அல்லவா? சட்டம் தண்டிக்கும் அல்லவா?

ஆக இனந்தெரியாத அமைப்புகளை அமைத்து வெளியிடப்படும் அறிக்கை எந்தப் பக்கமாக இருந்தாலும் நடுநிலை காக்கும் 'வலம்புரி நாளிதழ்' ஒருபோதும் பிரசுரிப்பதில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்தாக வேண்டும். அதேநேரம் வாதம்– எதிர்வாதம் என்பவற்றுக்கு வலம்புரியில் இடம் இல்லாமலும் இல்லை.

ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்புகள், அரசியல் கட்சிகள் உரிமை கோரி நயத்தக்க நாகரிகத்துடன் வெளியிடும் அறிக்கைகளுக்கு நிச்சயம் இடமுண்டு.

எனவே இனந்தெரியாத அமைப்புக்களை அடியோடு கைவிடுவோம். தவறான பாதைகளை மருந்துக்கேனும் பயன்படுத்துவதை தவிர்ப்போம். இத்தகைய தவறான பாதைகள் எல்லாவற்றையுமே தவறாக்கும். எனவே எதுவாயினும் நேர்மையுடன் அணுகுவோம். பத்திரிகைகளும் நடுநிலையுடன் –பொறுப்புடன் செயற்படுவோம்.

# மகிந்த சகோதரர்கள் டில்லி பயணம்; சந்தேகத்தை கிளப்புகிறார் சோமவன்ஸ!

(கொழும்பு)

ஜனாதிபதியின் சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ மற்றும் செயலாளர் ஆகியோர் இந்தியாவுக்கு அண்மையில்மேற்கொண்ட பயணம் மிகுந்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்திருக்கின்றார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இந்தச் சந்தேகத்தை அவர் கிளப்பினார்.

"விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டனர்.எமது தாயகத்தை அபிவிருத்தி செய்வதற்கான பாதை இதுதான்" என்ற பொருளில் இந்தப் பொதுக் கூட்டத்தில் சோமவன்ஸ அமரசிங்க உரையாற்றினார்.

"பசில் ராஜபக்ஷவும் , கோத்தபாய ராஜபக்ஷவும் இப்போது இந்தியாவில் நிற்கின்றார்கள்.இவர்களின் பயணம் தொடர்பாக எதற்காக முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை. செய்திகள் வெளியிடப்படவில்லை. அவர்கள் எங்கு சென்றாலும் அது தொடர்பாக பெருமளவுக்கு செய்திகள் வெளியிடப்படுகின்றன.ஆனால்; இந்தப் பயணம் மட்டும் இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது ஏன்? இந்தப் பயணம் ஒரு இரகசியப் பயணமாக இருந்தால் தேசத்துக்கு எதிரான துரோகம் ஒன்று இங்கு இடம்பெறலாம்" எனவும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

"அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்த நடைமுறைப் படுத்துவதற்கு நாம் அனுமதி வழங்கப்போவதில்லை. விடுதலைப் புலிகளிடம் இருந்து இந்த நாட்டை மீட்டெடுப்பதற்கு ஆயிரக்கணக்கானவர்கள் தமது உயிர்களைத் தியாகம் செய்துள்ளார்கள். அதனால் 13ஆவது திருத்தத்தின் மூலம் இந்த நாடு பிளவுபடுவதற்கு நாம் அனுமதிக்கப்போவதில்லை.

இந்த அரசாங்கமும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் போல அதிகாரப்பரவலாக்கலை நோக்கி தனது கவனத்தைத் திருப்பியுள்ளது.உங்களுடைய கொள்கையை மாற்றிக் கொண்டு அதிகாரப்பரவலாக்கல் நடைமுறைப்படுத்துவதாகக் கூறி தேர்தல் ஒன்றை சந்திக்குமாறு அரசுக்கு நாம் சவால் விடுகின்றோம்.

அரசாங்கத்தின் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை முறியப்படிப்பதற்காக இந்த நாட்டில் உள்ள தேசப்பற்றாளர்களுடன் இணைந்து செயற்படுவதற்கு நாம் தயாராக உள்ளோம் " எனவும் ஜே.வி.பியின் தலைவர் மேலும் தெரிவித்தார். (எ–5)

## மாணிக்கவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் கோண்டாவில் மேற்கு வேதபாராயணர் சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் மாணிக்கவாசகர் குருபூசை இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வேதபாராயணர் சனசமூக மண்டபத்தில் அபிவிருத்தி உதவியாளர் திருமதி. மகிந்தினி விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச சபை பிரதம முகாமை உதவியாளர் ப.பாலசுப்பிரமணியம் , சிறப்பு விருந்தினராக யாழ் பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் மு.அருள்வேல், கிராம சேவையாளர் திருமதி.குணவதனி பிரதாபாராயன், சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை அதிபர் இளையதம்பி தேவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (6)

## நெக்டெப்பினால் இளைஞர்- யுவதிகளுக்கான விசேட தொழிற்பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதி களில் தொழில் சார் அபிவிருத்தியை முன்னெடுக்கும் நோக்கில் தொழில்வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியை வழங்குவதாக நெக்டெப்பினால் விசேட செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பாரிய நிதியுதவியுடன் துணிகளுக்கு மையிடல், அழகுக்கலை, அலுமினியம் பொருத்துதல், தகவல் தொழில்நுட்பம், தொழில்விருத்தி பயிற்சி ஆகிய பயிற்சிநெறிகள் பருத்தித்துறை, பொலிகண்டி, வல்வெட்டித் துறை,குடத்தனை ஆகிய பிரதேசங்களில் யூலைமாதமளவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாவட்ட திட்டப்பணிப்பாளர் கே. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (6–7)

## தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்கும் தினம் 30 ஆம் திகதி வரை நீடிப்பு

(கொழும்பு)

ஊவா மாகாண சபை, யாழ்.மாநகர சபை மற்றும் வவுனியா நகரசபை ஆகிய தேர்தல்களில் தபால் மூலம் வாக்களிப்போரின் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை நீடிக்க ப்பட்டுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தேர்தல் சட்ட விதிகளின்படி தேர்தலொன்றுக்கு வேட்புமனு கோரப்பட்ட தினத்திலிருந்து 10 நாட்களுக்குள் தபால் மூலம் வாக்களிப்போர் விண்ணப்பிக்கவேண்டும். இதன்படி கடந்த 14 ஆம் திகதியுடன் இதற்கான கால எல்லை முடிவடையவிருந்தது. எனினும் இத்தினத்தை 25 ஆம் திகதி வரை நீடிப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது இதற்கான கால எல்லை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இக்கால எல்லைக்குப் பின்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமோ அனுப்பப்படும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.

இதேவேளை, யாழ்ப்பாணம், வவுனியா பகுதிகளிலும் நலன்புரி முகாம்களிலும் தங்கியுள்ள இடம்பெயர்ந்த தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்களும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரையே ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தேர்தல் செயலகம்மேலும் குறிப்பிட்டுள்ளது.(6)

## சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அனுசரணையில் உப்புமடம் விநாயகர் பெருமான் திருக்கோயிலின் மாணிக்கவாசகர் குருபூசை தின விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் "திருவாசகத்தின் உட்கிடை" என்னும் தலைப்பில் காரை எம்.பி. அருளானந்தன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். (6–4)

## பிரித்தானிய தூதரகத்தின் ஏற்பாட்டில் அனர்த்த முகாமைத்துவ பயிற்சி

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கை அமைச்சுக்களைச் சேர்ந்த அதிகாரிகள், பொலிஸார், தீயணைப்பு படையினர், பாதுகாப்பு படையினர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகளிற்கும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான ஒருவார கால பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மூன்றாவது முறையாக இம்முறை இடம்பெறும் இப்பயிற்சி நெறியில் 26 பேர் பங்குபற்றினர். பயிற்சியின் முடிபில் இவர்களுக்கான சான்றிதழ்களை பிரித்தானியாவின் இலங்கைக்கான தூதுவர் பீற்றர் ஹெய்ஸ் வழங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய பீற்றர் ஹெய்ஸ், 'பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்து நிறுவனக் கட்டமைப்புக்குள் பணியாற்றுவதற்கு அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அறிவு அவசியம். நாங்கள் இவ்விடயத்தில் இலங்கைக்கு உதவி புரிவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம் எனத் தெரிவித்தார். (6)

## பொல்லாப்பு எதுவுமின்றி காத்தருள்வாய்

**இன்று கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய கொடியேற்றம்**

கற்புலத்து மனோன்மணியே கனகவல்லி
கவின் பெறவே இவ்வுலகை ஆளுகின்றாய்
அற்புதமாய் நந்தாவில் பதியமர்ந்து
அழகான கோபுரமும் சோலை சூழ
பொற்புறு நற் தீர்த்தக் கேணியோடு
பொலிவுற மண்டபமும் எழில் பரப்ப
நற்தவத்தால் கொக்குவில் வந்தடைந்த
நர்த்தகியே! நாளும் நடனமாடுகின்றாய்
உற்றவினை அனைத்துமே போக்க என்றே
உமா மகேஸ்வரனாரு முனை அனுப்பிவைத்தார்
பொற்பாதத்தை நிதம் பூசிக்கின்றோம்
பொல்லாப்பு எதுவுமின்றி காத்தருள்வாய்

விகடகவி

## சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

### நம்பிக்கை



நம்மில் பெரும்பாலானவர்கள் இன்று வேதாந்திகளோ, புராணவாதிகளோ, தாந்திரிகர்களோ அல்ல. நாம் தீண்டாமை வாதிகளே. நமது சமயம் சமையலறையிலே உள்ளது. நமது தெய்வம் சமையல் பானையாயிற்று. நமது சமயமோ! என்னைத் தொடாதே நான் சுத்தமானவன் என்பதே. இது இன்னும் ஒரு நூற்றாண்டு நடந்து வந்தால் நம்மில் ஒவ்வொருவரும் பைத்திய ஆஸ்பத்திரியில் இருப்போம்.

உனது இலட்சியத்தினில் ஆழ்ந்து ஈடுபடல் வேண்டும்; ஒரு கணம் ஈடுபடுவதல்ல ; அமைதியாகவும் குலையாத முயற்சியோடும் நிலையாகவும் ஈடுபட வேண்டும். சாதகப் பறவை இடிமின்னல்களுக்கு இடையிலும் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கிக் கொண்டிருக்கும். அது மழை நீரை அன்றி வேறு நீரைக் குடிக்க விரும்பாது. அத்தகைய ஈடுபாடே தேவையானது.

# முட்டைகள் மீது அமர்ந்து யோகாசனம்

## பாடசாலை மாணவி சாதனை

(காஞ்சிபுரம்)

காஞ்சிபுரத்தில் பாடசாலை மாணவி, முட்டைகள் மீது அமர்ந்து யோகாசனம் செய்து சாதனை புரிந்தார். காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் கோவிந்தராஜு. இவரது மகள் சுவீத்தா 10ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

யோகா ஆசிரியர் திருநாவுக்கரசிடம் யோகா கற்றுவருகிறார். மக்களிடம் யோகா குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஆணிகள் பதிக்கப்பட்ட பலகை, கண்ணாடிப் பலகை, முட்டைகள் ஆகியவற்றின் மீது அமர்ந்து யோகாசனம்செய்து வந்தார். முட்டை மீது அமர்ந்து தொடர்ச்சியாக அனைத்து ஆசனங்களையும் செய்து சாதனை படைக்க திட்டமிட்டார்.

அதன்படி லிம்கா சாதனைக்காக முட்டை மீது அமர்ந்து யோகாசனம்செய்யும் நிகழ்ச்சி எஸ்.எஸ்.கே.வி பாடசாலை அரங்கில் நடந்தது. 8 முட்டைப்பெட்டிகளில் 120 முட்டைகள் வீதம் இரண்டு வரிசையில் 240 முட்டைகள் வைக்கப்பட்டன. அவற்றின் மீது அமர்ந்த சுவீத்தா 16 வகை யான யோகாச னங்களைச் செய்து பார்வையாளர்களைப் பரவசப்படுத்தினார்.



சாதனை குறித்து மாணவி சுவீத்தா கூறும் போது ஏதாவது சாதிக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் முட்டைமீது அமர்ந்து யோகா பயிற்சி செய்தேன். இப்பயிற்சியை கடந்த 8 வருடங்களாக செய்து வருகிறேன். தினமும் 10 முட்டைகள் உடையும். தினமும் பயிற்சி செய்ததால் தற்போது முட்டைகள் உடையாமல் ஆசனங்கள் செய்யமுடிகிறது. மேலும் பல சாதனைகளை புரிய பயிற்சி செய்து வருகிறேன் என்றார்.(6)

# தாமதமாக வந்ததால் அனுமதி மறுப்பு

## வெடிகுண்டு இருப்பதாக மிரட்டி விமானத்தை நிறுத்திய டாக்டர்

(பெங்களூர்)

மும்பையைச் சேர்ந்தவர் அக்ஷய். விமானப் படை டாக்டராக பணியாற்றி வருகிறார். இவர் நேற்று முன்தினம் இரவு பெங்களூரில் இருந்து மும்பை செல்ல ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் முன்பதிவு செய்திருந்தார்.

நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு பெங்களூர் விமான நிலையத்தில் 216 பயணிகளுடன் விமானம் புறப்பட தயாராக இருந்தது.

விமானத்தில் பயணிகள் அனைவரும் ஏறி அமர்ந்தனர். ஆனால் டாக்டர் அக்ஷய் தாமதமாக வந்தார்.

எனவே டாக்டர் அக்ஷயை விமானத்தில் ஏற அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இதனால் அவர் ஆத்திரமடைந்தார். தன்னை ஏற்ற அனுமதி மறுக்கப்பட்ட விமானத்தை அவர் நிறுத்தத் திட்டமிட்டார். அந்த விமானத்தின் தலைமை விமானியின் தொலைபேசி நம்பரை விமான நிலைய அதிகாரிகளிடம் பெற்றார்.

பின்னர் அந்த விமானியைத் தொடர்பு கொண்டு விமானத்தில் வெடிகுண்டு இருப்பதாக மிரட்டல் விடுத்தார். அப்போது விமானம் பறந்து கொண்டிருந்தது. உடனே அதிர்ச்சியடைந்த விமானி விமானத்தை தரை இறக்கினார். அதில் இருந்த அனைத்துப் பயணிகளும் வெளியேற்றப்பட்டனர். பின்னர் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனை செய்தனர்.

அப்போது விமானத்தில் வெடிகுண்டு ஏதும் இல்லை. அது வெறும் புரளி எனத் தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து வெடிகுண்டு மிரட்டல் விடுத்த டாக்டர் அக்ஷயை பொலிஸார் கைது செய்தனர். (6)

# கோடை வெயிலுக்கு 29 பேர் பலி

உத்தரப் பிரதேசத்தில் கோடை வெயிலின் தாக்கம் காரணமாக 29 பேர் உயிரிழந்துள்ளனர். உத்தரபிரதேச மாநிலத்தில் அனல் காற்று தாக்கி ஏற்கனவே 23 பேர் பலியாகியுள்ளனர். கடந்த புதன்கிழமை மட்டும் 6 பேர் பலியாகினர்.

இவர்களில் இட்டா, சோனேபத்ரா ஆகிய நகரங்களில் தலா 2 பேர், கான்பூர் மற்றும் அலகாபாத் நகரங்களில் தலா ஒருவரும் பலியானார்கள். இவர்களையும் சேர்த்து அந்த மாநிலத்தில் வெயில் மற்றும் அனல் காற்றுக்கு பலியானோர் எண்ணிக்கை 29 ஆக உயர்ந்துள்ளது. (6)

# நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் குழுக்களை அனுப்ப இந்தியா இணக்கம்

(புதுடில்லி)

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையின் படி , நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் எட்டுக் குழுக்களை அனுப்ப இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஏற்கனவே இந்தியா 4 நிலக்கண்ணி அகற்றும் பணியாளர்களை இலங்கைக்கு அனுப்பவிருப்பதாக தெரிவித்திருந்த நிலை யில், அதனை அதிகரிக்குமாறு கோரப்பட்டி ருந்தது.

இதற்கமைய இந்தியா நிலக்கண்ணி அகற்றும் குழுவை எட்டாக அதிகரித்துள்ளதாக அவர் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் வைத்து செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

அவர்கள் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவை சந்தித்த வேளையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. (6)

# 300 இரட்டையர்கள் வாழும் அதிசய கிராமம்

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள நன்னம்ரா பஞ்சாயத்துக்கு உட்பட சில கிராமங்களில் ஒன்று கோதின். இந்தக் கிராமத்தில் 7 வட்டாரங்கள் உள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 2ஆயிரம் பேர் வசிக்கின்றனர்.

இந்தக் கிராமத்தில் தான் 300க்கும் மேற்பட்ட இரட்டையர்கள் வசிக்கின்றனர். இந்தக் கிராமத்தில் பெரும்பாலும் இரட்டைக் குழந்தைகளே பிறக்கின்றன. இது அதிசயமாக கருதப்படுகிறது.

கிராமத்திலேயே மிகவும் மூத்த இரட்டையர்களில் ஒருவரான முகமது ஹாயிக்கு இப்போது 85 வயதாகிறது. அவரது சகோதரர் சில ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டார். 65 வயதான பத்துக்குட்டி, குன்ஜி பத்துக்குட்டி ஆகிய இரட்டையர்கள்தான் இப்போது ஜோடியாக உயிருடன் இருப்பவர்களில் மூத்தவர்கள். (6)


## UNIVERSITY OF JAFFNA
## TENDER NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed tenders from civil works contractors registered with ICTAD for the following work.

| Work Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Civil Works at the Network Operating Centre (NOCs) and direct Electricity supply to Network Operating Centre and Network Racks at University of Jaffna | 10,000.00 | 500.00 | M8/C9 |

Tender forms may be obtained from Senior Assistant Registrar/Capital Works & Planning University of Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the above tender fee at the shroff's Counter, University of Jaffna until 13.07.2009.

Perfected tender should be sealed and marked with the job and the name of the work on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P.Box 57, Thirnelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Tenders will be accepted till 2.00 p.m on 17.07.2009 and open immediately thereafter.

Tenderers or their accredited representatives could be present at the time of opening of tenders.

Tender forms may be inspected by the tenderers free of charge at the Capital Works & Planning Branch of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely.
Jaffna.
26.06.2009

Registrar
University of Jaffna.

(C/2675)





யாழ் /வண் கிழக்கு கலட்டியம்பதி

திருவருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

### புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா

விநாயகர் அடியார்களே!

எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமானின் திருவுள்ளப்படி புதிய சித்திரத்தேர் ஒன்று உருவாக்கப்பட்டு நிகழும் மங்களகரமான விரோதி வருடம் ஆனி மாதம் 13 ஆம் நாள் இன்று (27.06.2009) சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வெள்ளோட்ட விழா ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்ச்சி நிரல்

மாலை 3.00 மணியளவில் பொங்கல் வழிபாடு ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் இடம்பெற்று தொடர்ந்து வெள்ளோட்ட விழா நடைபெறும்.

தலைமையேற்று வரவேற்புரை நிகழ்த்துபவர்: உயர்திரு மு.நந்தகோபாலன் (பிரதேச செயலர், வேலணை)

மஹோற்சவ பிரதம குரு: சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள்

ஆசியுரை: சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் (பிரதமகுரு வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)

ஆசியுரை: சிவஸ்ரீ சி.கிருபாகரக் குருக்கள் (பிரதம குரு திருநெல்வேலி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம்)

அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் நல்லை ஆதீனம்

வாழ்த்துரை: உயர்திரு பா.செந்தில்நந்தனன் அவர்கள் பிரதேச செயலர், நல்லூர்

வாழ்த்துரை: அமரர் சண்முகம் குடும்பத்தினர் சார்பில் திருமதி ம.மகேந்திரன் அவர்கள்

ஸ்தபதி உரை: விஸ்வப் பிரம்மஸ்ரீ ஜீவரத்தினம் ஜெயப்பிரகாஸ்

நன்றியுரை : சிவஸ்ரீ வி.பிரணவன் ஐயா

28.06.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணியளவில் புதிய சித்திரத்தேரில் பஞ்சமுக விநாயகர் எழுந்தருளுவார்.

யாழ்.கலட்டி

இங்ஙனம்
தேவஸ்தானம்.

(2882)

# நடுவர் தீர்ப்பு மறுபரிசீலனை முறை சர்வதேச கிரிக்கெட்சபை ஒப்புதல்

(லண்டன்)

பரிசோதனையில் இருந்த நடுவர்தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்யும் முறைக்கு சர்வதேச கிரிக்கெட் சபை ஒப்புதல் அளித்துள்ளது. எதிர்வரும் ஒக்டோபர் முதல் இம்முறை டெஸ்ட் போட்டிகளில் நிரந்தரமாக்கப் படவுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) வருடாந்த கூட்டத்தொடர் லண்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. முதல் நாளான நேற்றுமுன்தினம் சில முக்கிய முடிபுகள் எடுக்கப்பட்டன. அவை வருமாறு;

### தீர்ப்புக்கு அப்பீல்

டெஸ்ட் போட்டிகளில் நடுவர்கள் தரும் தவறான முடிபுகளை தவிர்க்க முடிபுகளை பரிசீலனை செய்யும் முறை கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் பரிசோதனையில் இருந்து வருகிறது.

இதன்படி துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சினை செய்யும் அணிகள் தலா 2 முறை நடுவர்கள் முடிபுக்கு எதிர்ப்பு தெரிவித்து மூன்றாவது நடுவரிடம் முறையிட அனுமதி வழங்கப்படும்.

தற்போது பரிசோதனையில் உள்ள இம்முறைக்கு ஐ.சி.சி. ஒப்புதல் வழங்கியுள்ளது. இது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் டெஸ்ட் போட்டிகளில் நடைமுறைக்கு வரவுள்ளது.

### பகலிரவு டெஸ்ட்

பகலிரவு போட்டிகளை நடத்துவதில் நடைமுறை சிக்கல் உள்ளது. இதற்கு ஏற்ற பந்துகளை பயன்படுத்த ஐ.சி.சி. தொழில் நுட்ப குழு நடவடிக்கை எடுத்து வருகிறது. பிரச்சினைகளை கடந்து இந்த ஆண்டின் இறுதியில் இவ்வகை டெஸ்ட் போட்டிகள் பரிசோதனை செய்யப்படும்.

### ஒரு போட்டிதடை

சர்வதேச ஒருநாள் போட்டிகளின் போது நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை தாமதமாக வீசும் அணிக்கு இதுவரை அபராதம் விதிக்கப்பட்டு வருகிறது.

இனி இந்த அபராதத் தொகை இரட்டிப்பாக்கப்படும். தவிர ஆண்டுக்கு 3 முறை இத்தவறை செய்யும் அணியின் தலைவருக்கு ஒரு போட்டி தடை விதிக்கப்படும்.

### அபராதம்


சர்வதேச போட்டிகள் நடக்கும் மைதானம் மற்றும் ஆடுகளங்கள் தரம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும். துடுப்பாட்டத்துக்கு மட்டும் ஒத்துழைக்கும் ஆடுகளங்கள் மற்றும் தகுதியற்ற ஆடுகளங்களில் போட்டிகளை நடத்தினால் சம்பந்தப்பட்ட கிரிக்கெட் சபைகளுக்கு அபராதம் விதிக்கப்படும்.

### நடுவர் முடிபே இறுதி

வெளிச்சமின்மை காரணமாக போட்டியை நிறுத்த நடுவர்களுக்கு முழு அதிகாரம் உண்டு. இதற்கு துடுப்பாட்டம் செய்யும் வீரர்களின் கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை.

ஐ.சி.சி. போட்டி அட்டவணை எதிர்வரும் 2012 மே மாதம் வரை முடிபு செய்யப்பட்டு விட்டது. அதற்கு மேல் நடக்கும் போட்டிகளின் அட்டவணை தயாரிக்கும் பணி கிரிக்கெட் சபைகளின் ஒப்புதலுக்குப் பின் இறுதி செய்யப்பட உள்ளது.

# விம்பிள்டன் டென்னிஸ் தொடர் மூன்றாவது சுற்றில் வீனஸ்



(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு மூன்றாவது சுற்றுக்கு அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லிம்ஸ் முன்னேறியுள்ளார். இங்கிலாந்தில் உள்ள லண்டனில் விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

பெண்கள் ஒற்றையரில் நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது சுற்றுப் போட்டியில் நடப்பு சம்பியன் அமெரிக்காவின் வீனஸ் வில்லிம்ஸ் உக்ரைனின் கதரினாபான்டரன்கோவை சந்தித்தார். முதல் செட்டை வீனஸ் 6-3 என எளிதாக கைப்பற்றினார்.

தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய வீனஸ் இரண்டாவது செட்டை 6-3,6-2 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

### பெர்டிச் முன்னேற்றம்

ஆண்கள் ஒற்றையரில் நடந்த இரண்டாவது சுற்றுப் போட்டியில் செக்குடியரசின் தாமஸ் பெர்டிச்,பிரான்ஸின் பவுல்-ஹென்றி மாத்திவ்வை 6-2,6-4,6-4 என்ற நேர் செட்டில் வீழ்த்தி மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்ற போட்டிகளில் அவுஸ் திரேலியாவின் ஜர்கன்மெல்சர், ருமேனியாவின் விக்டர் ஹனஸ்கு,அவுஸ்திரேலியாவின் ஹெவிட் வெற்றி பெற்றனர்.

### சபினா முன்னேற்றம்

விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் இரண்டாவது சுற்றில் உலகின் நம்பர்-1 வீராங்கனையான ரஷ்யாவின் டினரா சபினா,பராகுவேயின் ரோசானா டி லாஸ் ரியாசை எதிர் கொண்டார். விறுவிறுப்பான இப்போட்டியில் சபினா 6-3, 7-5 என்ற நேர் செட்டில் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

## பீற்றர்சன் காயம் சிக்கலில் இங்கிலாந்து



முன்னணி வீரர் கெவின் பீற்றர்சன் காயத்தால் அவதிப்பட்டு வருவது ஆஷஸ் தொடரில் இங்கிலாந்துக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இங்கிலாந்து-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் யூலை 8ஆம் திகதி இங்கிலாந்தில் ஆரம்பமாகிறது. இந்தமுறை ஆஷஸ் கோப்பை வெல்வதில் இங்கிலாந்து உறுதி யாக உள்ளது. ஆனால் அணியின் தலைவர் முன்னணி வீரர் கெவின் பீற்றர்சன் குதிக்காலில் ஏற்பட்ட காயத்தால் அவதிப்பட்டு வருகிறார். பீற்றர்சன் இல்லை என்றால் இங்கிலாந்தின் ஆஷஸ் கனவு பறிபோகும் என்கிறார் முன்னாள் அவுஸ் திரேலிய வீரர் ஷேன்வோர்ன்.

# இசையால் உலகையே ஆட்டிப் படைத்த மைக்கல் ஜாக்ஸன் காலனின் பிடியில்!



பொப் இசை உலகின் சூப்பர்ஸ்டார் மைக்கல் ஜாக்ஸன் நேற்று அதிகாலை 2.26 (அமெரிக்க நேரம்) மணியளவில் லொஸ் ஏஞ்சல்ஸ் மருத்துவமனையில் மாரடைப்பால் காலமானார். அவருக்கு வயது 50.

தனது இனிய இசையால் உலகையே ஆட்டிப்படைத்தவர் மைக்கல் ஜாக்ஸன். 1958இல் அமெரிக்காவின் இந்தியானாவில் இவர் பிறந்தார். தனது 9 வயதிலேயே இசைத்துறையில் கால்பதித்த ஜாக்ஸன் வெற்றிகரமான பொப் பாடகராக மேடைகளைக் கலக்க ஆரம்பித்தார்.

'தி ஜாக்ஸன் 5' எனும் பெயரில் தனி இசைக்கு குழுவைத்தொடங்கிய ஜாக்ஸன் 1970இல் அந்தக் குழுவின் சூப்பர்ஸ்டாராகவும் உலக பொப் இசையின் மிகச் சிறந்த பாடகராகவும் திகழ்ந்தார். அப்போது அவருக்கு வயது 12 மட்டுமே.

1972ஆம் ஆண்டு பென் எனும் பெயரில் தனது தனி அல்பத்தை வெளியிட்டார். 6 வருடங்களுக்குப்பின் தனது முதல் திரைப்படமான தி விஸ்ஸில் நடித்தார்.

### சரித்திரம் படைத்த இசை ஆல்பங்கள்

பின்னர்தான் தனது நண்பர் ஜோனுடன் இணைந்தார். 1979இல் ஆஃப் தி வால் மற்றும் 1982இல் த்ரில்லர் ஆகிய ஜாக்ஸனின் இசை ஆல்பங்கள் சரித்திரம் படைத்தன.

ஆஃப் தி வால் ஆல்பம்தான் டிஸ்கோ இசையை உலகெங்கும் பிரபலபடுத்தியது. 10 மில்லியன் இசைத்தட்டுக்கள் விற்பனையாகின. அன்று உலகையே வாய்பிளக்கச் செய்த சாதனை இது.

த்ரில்லருக்கு மட்டும் 8 கிராமி விருதுகள் கிடைத்தன. உலக இசையின் சக்கரவர்த்தியாக அறிவிக்கப்பட்டார் மைக்கல் ஜாக்ஸன். இனம்,மொழி,நாடு என்ற எல்லைகளைக் கடந்து உலகமே அவரது இசைக்காக உருகியது.

த்ரில்லர் ஆல்பம் மட்டுமே 41 மில்லியன் விற்றுத் தீர்ந்தன. இன்றும் பொய் இசையில் அதிகம் விற்பனையாகும் ஆல்பங்களில் ஒன்றாகவே த்ரில்லர் திகழ்கிறது. இது உலக சாதனையாக கின்னஸ் புத்தகத்திலும் பதியப்பட்டது.

### இசை உலகின் புதிய விடியல்

இசையிலும் கூட நிறவெறி கொண்டிருந்த மேற்குலக நாடுகளில் ஜாக்ஸனின் வருகை ஒரு புதிய விடியலாகத் திகழ்ந்தது. வேறு வழியே இல்லாமல் வெள்ளையர்கள் ஜக்ஸனைக் கொண்டாடும் அளவுக்கு இசையைத் தனது வசப்படுத்திக் கொண்டிருந்தார் ஜாக்ஸன்.

பணம்,வியாபாரம் இரண்டிலும் வெல்பவருக்கே உலகம் சொந்தம்... நிறமும் இனமும் ஒரு பிரச்சினையில்லை என்பதை அவரது முன்னேற்றம் உலகுக்கு எடுத்துக் காட்டியது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு புதிய தன்னம்பிக்கை தருவதாகவும் அது அமைந்தது.

1992ஆம் அண்டு ஹீல் த வேர்ல்ட் எனும் அறக்கட்டளையைத் தொடங்கினார் மைக்கல் ஜாக்ஸன். இந்த அமைப்பு மூலம் உடலால், மனதால்,நிறவெறியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவிகளைச் செய்வதாக அறிவித்தார்.


ஆதரவற்ற பல சிறுவர்களை இந்த அமைப்பின் மூலம் பராமரிப்பதற்காக அமெரிக்காவில் நெவர்லாண்ட் என்னும் பண்ணை இல்லத்தை வாங்கினார். அங்கேயே இந்த சிறுவர்களுடன் பொழுதைக் கழித்தார்.

### பாலியல் குறித்த புகார்கள்

இங்குதான் வந்தது வம்பு. சிறுவர்களை அவர் பாலியல் தொந்தரவு செய்வதாக அவர் மீது புகார்கள் எழுந்தன. வழக்குகள் தொடுக்கப்பட்டன. நீதிமன்றுக்கு வெளியே ஒப்புதல்கள் நடந்தன. இந்த சிக்கல்களில் சிக்கித் தவித்த ஜாக்ஸனால் மீண்டும் ஒரு இசை ஆல்பத்தைத் தர முடியாமல் போனது. ஆனாலும் கடைசி வரை பொப் உலகின் மன்னனாகவே அவர் மக்கள் மனதில் இடம் பிடித்தார்.

1994இல் எல்விஸ் பிரஸ்லேயின் மகள் லிசா மேரியைத் திருமணம் செய்து கொண்டு தன்மீதான சிறுவர் பாலியல் தொந்தரவு புகார்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முயன்றார். ஆனால் திருமணமும் இரண்டே ஆண்டுகள்தான் நீடித்தது.

லிசா மேரியை விவாகரத்து செய்த கையோடு 1996இல் டெபி ரோவைத் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்கு இரு குழந்தைகளும் பிறந்தனர். 1999 வரை தான் இந்தத்திருமண உறவும் நீடித்தது.



### குழந்தைகளின் பெயரிலும் புதுமை

பின்னர் வேறொரு பெண் மூலம் மூன்றாவது குழந்தையும் பிறந்தது அவருக்கு மூவருமே ஆண்குழந்தைகள். மைக்கல் பிரின்ஸ், மைக்கல் பிரின்ஸ் 1,மைக் கல் பிரின்ஸ் 2 என்று தான் தன் குழந்தைகளுக்கு அவர் பெயரிட்டிருந்தார்.

2005ஆம் ஆண்டு அனைத்து பாலியல் புகார் வழக்குகளிலிருந்தும் நீதிமன்றம் மைக்கல் ஜாக்ஸனை விடுவித்தது.

மீண்டும் ஒரு சாதனையை படைக்க ஆர்வமாக இருந்த அவர் எதிர்வரும் ஜூலையில் 13 ஆம் திகதி முதல் லண்டன்,பிரிட்டனின் குறிப்பிட்ட சில நகரங்களில் 50 இசை நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டிருந்தார். இதற்காக லொஸ் ஏஞ்சல்ஸில் தீவிரமான ஒத்திகையும் நடந்து வந்தது.

இந்த நிகழ்ச்சிகள் மூலம் தனது இமேஜைத் திரும்பப் பெறமுடியும், புதிய இசை ஆல்பத்தை உருவாக்க முடியும் என்று பலமான நம்பிக்கை கொண்டிருந்தார்.

### இறுதிவரை நடக்காது போன இறுதித் திரை

இறுதித் திரை எனும் பெயரில் நடக்கவிருந்த இந்த இசை நிகழ்ச்சி இறுதிவரை நடக்காமலே போனது.

ஜாக்ஸன் உடல் நிலை குறித்து வதந்திகள் பல ஆண்டு காலமாகவே இருந்து வருகின்றன. கறுப்பர் இனத்தைச் சேர்ந்தவரான அவர் தன் உடல் முழுவதையுமே தொடர் கொஸ்மெடிக் சர்ஜரி மூலம் சிவப்பாக மாற்றிக் கொண்டார்.

முகத்தில் மட்டும் பல முறை கொஸ் மெடிக் சிகிச்சை நடத்தப்பட்டது. இதனால் அவரது முகம் குறிப்பிட்டகாலத்துக்குப் பிறகு உரு மாறத் தொடங்கியதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இந்த கொஸ்மெடிக் சிகிச்சைகளே அவருக்கு தோல் புற்றுநோயை வரவழைத்து விட்டது என்றும் கூறப்பட்டது.

மருத்துவ பரிசோதனைக்காக அவரது உடல் லொஸ் ஏஞ்சல்ஸ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ஜாக்ஸனின் மரணம் இயற்கையானது தான் என்றாலும் அதை உடனடியாக உறுதிப்படுத்த முடியாது. ஜாக்ஸன் போன்ற மிக உயர்ந்த அந்தஸ்தில் இருந்த ஒருவரது மரணத்தை ஆராயாமல் சாதாரணமாக விட்டுவிடக் கூடாது. அதற்காகவே இந்தப் பரிசோதனை என்று ஜாக்ஸனின் முன்னாள் வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

# குப்பை கூழங்கள் குவிக்கப்படும் இடங்களை பறிமுதல் செய்ய உத்தரவு

(கொழும்பு)

அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் தற்போது உள்ளூராட்சி சபைகளினால் குப்பை கூழங்கள் குவிக்கப்படும் இடங்களை அரசாங்கத்திற்கு பறிமுதல் செய்யுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். தொற்று நோய் தடுப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது. இதன் போது உரையாற்றிய ஜனாதிபதி உள்ளூராட்சி சபைகளுக்கு பிரச்சினையாக உள்ள குப்பை கூழங்களை மீள்சுழற்சி செய்ய விரும்பும் முதலீட்டாளர்களை இனங்கண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்தார்.

விசேடமாக டெங்கு ஒழிப்பு தொடர்பான செயற்திட்டத்தின் பொருட்டு பொது சுகாதார பிரிவு, கல்வி அமைச்சு, சமுர்த்தி நிறுவனங்கள் மற்றும் அரச சேவையாளர்களை தெளிவூட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதாரத்துறை அமைச்சு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ச-5)

## கட்டைக்காடு பகுதியில்...

கிடைத்த இரகசிய தகவலையடுத்து, அங்கு சென்ற வவுனியா பொலிஸார் இவற்றைக் கைப்பற்றியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜிபிஎஸ்-39, செய்ம்மதி தொலைபேசிகள் 12,அவற்றுக்கான சிம் கார்ட்டுகள் 13, கொம்பாஸ் 44,தொலைநோக்கி கண்ணாடிகள் 06, தோட்டாக்கள் 14 என்பனவே இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் நிமால் லியுக்கே, வவுனியா பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி விஜே குணவர்த்தன, வவுனியா பொலிஸ் அத்தியட்சகர் ரண்மல் கொடித்துவக்கு ஆகியோரின் வழிகாட்டல் உத்தரவுகளின் பேரில் வவுனியா மாவட்ட குற்றப்பிரிவு பொலிஸார் 59 ஆம் படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் நந்தன உடவத்தவின் ஒத்துழைப்போடு இந்தப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## கப்டன் அலி...

கொண்டுவரப்பட்டு விநியோ கிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாறாக மீண்டும் கப்டன் அலி கப்பலை நாட்டுக்குள் அனுமதிக்கும் திட்டம் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதியின் செயலாளர் சிங்கள பத்திரி கையொன்றுக்கு வழங்கிய தொலைபேசி செவ்வியின் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் இடம்பெயர்ந்து வாழும் மக்களை மீளக் குடியமர்த்த இந்தியாவும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு மக்களது ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து இந்திய அரசாங்கத்திற்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## நமக்காக...

ஒன்றினை உத்தியோகபூர்வமாக அமெரிக்காவில் ஆரம்பித்து வைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள இலங்கையர்கள் பலர் இந்த நிதியத்தில் இணைத்து கொள்வதற்கு ஏற்கனவே தமது விருப்பத்தினை தெரிவித்துள்ளனர். அத்துடன் நிதி மற்றும் ஒத்துழைப்புக்களையும் அவர்கள் வழங்குவார்கள் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (ச-14)

## கப்பல்...

காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (ச)

# இடைத்தங்கல் முகாமிலுள்ள சிறுவர்கள் போஷாக்கின்மையால் பாதிப்பு

(ஜெனீவா)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள சுமார் 5 ஆயிரம் சிறுவர்களிடையே போஷாக்கின்மை வீதம் அதிகரித்து காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் சபை கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு இலங்கை அரசாங்கம் பிரத்தியேகமான ஊட்டச்சத்து திட்டத்தை அறிமுகம் செய்ய வேண்டுமென ஐக்கிய நாடுகளின் சிறுவர் மற்றும் ஆயுத மோதல்களுக்கு எதிரான சிறப்புப் பிரதிநிதி

## ஐ.நா. கவலை

ராதிகா குமாரசாமி கூறியுள்ளதாக பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

இது குறித்து ராதிகா குமாரசாமி மேலும் கூறியுள்ளதாவது,

வடக்கில் இடம்பெற்ற மோதல்களால் பாதிக்கப்பட்ட நிலையில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் 2 இலட்சத்து 80 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் சுமார் 5 ஆயிரம் சிறுவர்கள் போஷாக்கின்மையால் அவதியுறுவதாக இலங்கைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது கவலைக்குரிய விடயமாகும். எனவே, இலங்கை அரசாங்கம் இது குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், பிரத்தியேக ஊட்டச்சத்துணவு திட்டத்தையும் அறிமுகம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. (ச-5)

# இ.போ.ச. ஊழியர்களுடன் அமைச்சர் நாளை சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கடந்த காலங்களில் தனித்தனியாகவும், அமைப்பு ரீதியாகவும் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு போக்குவரத்துச் சபை யாழ்.சாலை ஊழியர்களுடன் சந்திப்பு ஒன்றுக்கு அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளார். எனவே நாளை மாலை 3.30 மணிக்கு அனைத்து ஊழியர்களையும் தவறாது அமைச்சு அலுவலகத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ்.சாலை முகாமையாளர் எஸ்.யோகநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-5)

## கோரமின்மை...

போதும் மொத்தம் 8 உறுப்பினர்களே அங்கு ஒன்று கூடினர்.

சபையைத் தொடர்ந்து நடத்துவதற்கு குறைந்தது 21 உறுப்பினர்கள் தேவை என்பதால் கோரமின்றி சபை ஒத்தி வைக்கப்படுவதாக பிரதி நிர்வாகத் தலைவர் அறிவித்தார். (ச-5,14)

## விடுதலை...

விசாரணைகளுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பலர் விசாரணைகள் முடிபடைந்த நிலையில் சட்டமா அதிபரின் அறிக்கைக்காக காத்திருக்கின்றனர். வடக்கு கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சிறைச்சாலையின் 130ஆவது விடுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## 13ஆவது திருத்...

அரசாங்கம் முக்கியமான வெற்றியை பெற்றுள்ளதாகவும் 13ஆவது அரசியல் திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலாளர் றொபட் ஓ பிளேக் தெரிவித்துள்ளமை குறித்து வினவியபோதே வெளியுறவு செயலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலாளர் றொபட் ஓ பிளேக் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

இலங்கை யுத்தத்தில் முக்கியமான வெற்றியை பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ள விடயமானது ஆரோக்கியமானதாகும் என்றார். (ச-5)

# அதிகளவு இராணுவ நடமாட்டமே...

எம்.கே.நாராயணன், இந்திய வெளியுறவுத் துறை செயலர் சிவசங்கர் மேனன் மற்றும் இராணுவச் செயலர் உள்ளிட்ட மூவர் குழுவை கடந்த புதன்கிழமை மாலையில் சந்தித்து ஆலோசனை செய்தார்கள்.

அப்போது, தமிழர் பகுதிகளில் இயல்பு நிலை திரும்பாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் அப்பகுதியில் இராணுவத்தினரின் அளவுக்கு அதிகமான நடமாட்டம்தான் என்று சுட்டிக்காட்டிய இந்தியத் தரப்பு, இராணுவத்தைப் பாசறைக்குத் திரும்பச் செல்ல உத்தரவிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் அனைவரும் அவரவர் வீடுகளுக்குத் திரும்ப உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், தமிழர் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கைகளை 10 நாட்களுக்குள் முடிக்க வேண்டும், தமிழர் பகுதிகளிலிருந்து இலங்கை இராணுவத்தை விலக்கும் பணியை உடனடியாகத் தொடங்க வேண்டும் என்று இலங்கையிடம் இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையை இலங்கை அரசும், இராணுவமும் முழுவதுமாக பூர்த்தி செய்து முடிக்கும் வரை பொறுமை காத்த இந்திய அரசு இப்போது இலங்கை விவகாரத்தில் தமிழர்களின் உரிமைகளையும் நலன்களையும் காக்க வலுவான நடவடிக்கைகளைத் தொடங்கியிருப்பதையே இது உணர்த்துகின்றது.

முகாம்களில் தமிழர்கள் போதிய உணவு, சுகாதார வசதியின்றி அடைத்து வைக்கப்பட்டிருப்பதால் உடல் ரீதியாகவும் உளவியல் ரீதியாகவும் பாதிப்பு அடைந்து வருவதனால் அனைத்து முகாம்களையும் மூடிவிட்டு அனைவரும் வீடு திரும்ப அனுமதிக்க வேண்டும் என்று அடுத்து கோரப்பட்டது.

தமிழர் பகுதிகளில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை அகற்றும் பணியை இலங்கை அரசு உடனே தொடங்காவிட்டால் பத்து நாட்களுக்குப் பிறகு அந்தப் பணியில் 'இந்தியா ஈடுபட்டு உதவி செய்யும்' என்று குறிப்பாக வலியுறுத்தப்பட்டதாக தெரிகிறது.

அதாவது 'இந்தியா தலையிடும்' என்று நேரடியாகவும் கடுமையாகவும் கூறாமல் 'உதவி செய்யும்' என்று ராஜரீகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலிருந்து இந்திய அரசு எந்த அளவுக்குத் தமிழர்கள் விஷயத்தில் தீவிரமாக இருக்கிறது என்பது இலங்கை அரசுக்குப் புரிந்திருக்கும் என்று வெளியுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெளியுறவுத்துறை செயலர் சிவ்சங்கர் மேனனும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனும் தமிழர்களின் எண்ணஓட்டங்களைப் புரிந்துகொண்டு அதற்கேற்ப இப்போது பேசத் தொடங்கியிருக்கின்றனர் என்று கருதவும் இடமிருக்கிறது.

அத்துடன் சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் இலங்கை நெருக்கமாகப் போவது தங்களுடைய பாதுகாப்புக்கு நல்லதல்ல என்பதும் இந்திய வெளியுறவுத்துறை, இராணுவ அதிகாரிகளுக்குஇப்போது உறைத்திருக்க வேண்டும் என்றும் தோன்றுகிறது.

இலங்கையின் மறுசீரமைப்புக்கு அந்த நாடு எடுக்கவுள்ள அனைத்து நடவடிக்கைகளிலும் இந்தியா துணை நிற்கும், அதேவேளையில் சிங்களவர்களுக்கும் இணையாக தமிழர்களுக்கும் அனைத்து உரிமைகளும் கல்வி, வேலைவாய்ப்பில் சம வாய்ப்பும் தரப்பட வேண்டும் என்று இந்தியத் தரப்பில் வலுவாக வலியுறுத்தப்பட்டது.

தமிழீழம் வேண்டும் என்று ஆயுதம் எடுத்துப் போராடிய விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்கள் கொல்லப்பட்டு அந்த இயக்கம் இப்போது செயல்பட முடியாதபடிக்கு முடக்கப்பட்டிருக்கலாம், ஆனால் தமிழர்கள் தனி நாடு கேட்டதற்கான காரணங்களை நீக்காத வரை அத்தகைய வெற்றி எதுவும் இலங்கைக்கு நிரந்தர நிம்மதியைக் கொடுத்து விடாது என்று இந்தியத் தரப்பு ராஜபக்ஷ சகோதரர்களிடம் சுட்டிக்காட்டியதாகத் தெரிகிறது.

தமிழர்களுக்கு நிவாரணப் பொருட்களை ஏற்றிவந்த கப்டன் அலி கப்பலை இந்திய செஞ்சிலுவைச் சங்கம் தன் பொறுப்பில் எடுத்துக் கொண்டால் நிவாரணப் பொருள்களை இலங்கையில் இறக்க அனுமதிப்பதாக அந்தத் தலைவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இதற்கு தமிழக முதல்வர் மு.கருணாநிதி அளித்த நெருக்குதலும் முக்கிய காரணம் என்று தலைநகர வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கச்சதீவை இராணுவக் கேந்திரமாக்க இலங்கை முயல்கிறது, அதற்கு உதவ சீனாவும் பாகிஸ்தானும் முன்வந்துள்ளன என்ற தகவல்களை இந்தியா அலட்சியப்படுத்த முடியாது என்பதையும் அத்தகைய எந்தபொருத்து மீறலையும் இந்தியா வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காது என்றும் இந்தியத் தரப்பினர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அதையடுத்தே இலங்கைத் தரப்பில் அவசர மறுப்பு தெரிவிக்கப்பட்டது. கச்சதீவை இராணுவ நோக்கத்துக்குப் பயன்படுத்தும் திட்டமோ, அதில் பிற நாடுகளின் தலையீட்டை அனுமதிக்கும் எண்ணமோ இலங்கை அரசுக்கு இல்லை என்று இலங்கை அரசு விளக்கமும் அளித்துள்ளது. இவையெல்லாம் பத்திரிகைகளின் கற்பனையே என்றும் அது மறுத்திருக்கிறது.

தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்கும் இலங்கை அரசியல் சட்டத்தின் 13-வது திருத்தத்தை மேலும் வலுவூட்டி தமிழர்களுக்கு சமவுரிமைகளும் அந்தஸ்தும் அளித்து அவர்களை தேசிய நீரோட்டத்தில் இணைத்துக் கொள்ளப் போவதாக இலங்கை அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னும் 180 நாட்களுக்குள், அதாவது ஆறு மாதங்களுக்குள் தமிழர்கள் அனைவருமே வீடுகளுக்குத் திரும்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் முகாம்கள் மூடப்படும் என்றும் இலங்கை பிரதிநிதிகள் உறுதி அளித்துள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது என்றுள்ளது. (ச-5)

## தமிழர்களுடன்...

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி இராஜாங்க அமைச்சர் றொபேட் ஓ பிளேக் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை பாதுகாப்புப் படையினருக்குமிடையிலான யுத்தம் முடிபடைந்த பின்னர் நாட்டுக்குள்ளேயே இடம்பெயர்ந்த மக்களுடனான தொடர்பு முறைகளில் முன்னேற்றம் காணப்படுகின்றது.

யுத்தம் முடிபடைந்தவுடன் பொதுவான தொடர்புகள் விருத்தியடைந்த போதிலும் என்னும் அநேகம் செய்யவேண்டியிருக்கிறது.

வடக்கில் முகாம்களில் தங்கியுள்ள மக்களை மனிதநேய நிவாரண அமைப்புக்கள் எதுவித தடையுமின்றி சந்திப்பதற்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்குமாறும் இலங்கையிலுள்ள சிறுபான்மைத் தமிழ் மக்களுடன் அரசியல் நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுமாறும் நாங்கள் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம் என்றார்.

யுத்தத்தின் பின்னர் மனிதநேய நிவாரணம், சிறுபான்மையினரை அரசியல் நீரோட்டத்தில் சேர்த்துக்கொள்ளுதல் ஆகியன குறித்து இலங்கை அரசாங்கம் தற்போது எடுக்கும் நடவடிக்கைகள் பயங்கரவாதத்திற்கு முடிவுகட்டுவதற்கும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக் கொள்வதற்கும் அவசியமானவை என்றும் பிளேக் மேலும் தெரிவித்தார். (ச-5)

DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்.
அனைவருக்கும் நன்றி"
2008.02.09 தொடக்கம் 2009.06.20 வரை
நாம் நாவலர் வீதியில்
இயங்க ஒத்துழைத்தவர்களுக்கு...
ஜூன் - 27

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.